வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 01.02.2023 புதன்கிழமை இதழ் : 54 பக்கங்கள் : 16

# அரச உத்தியோகத்தர்களை குறைக்கும் பணி ஆரம்பம்!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தகவல்

கொழும்பு, பெப்ரவரி 01

**சகல அரசாங்க நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப் பட்டு வருகின்றது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.**

சிறப்பான முறையில் கடமையாற்றாத ஊழியர்கள் சுயவிருப்பில் ஓய்வுபெறும் முறை தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

ஒவ்வொரு நிறுவனத்திலும் மொத்த ஊழியர்

15





## 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தெய்வேந்திரமுனைக்கு சைக்கிளோட்டம்!

வடமராட்சி, பெப். 01

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனைக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

பருத்தித்துறை - சக்கோட்டையிலிருந்து நேற்று காலை 9. 15 மணிக்கு இந்த சைக்கிளோட்டப்போட்டி ஆரம்பமானது. இதனை, இலங்கை

15

## மனித உரிமை சட்டங்களை அரசு மீறி செயல்படுகின்றது

### 188 அமைப்புகளின் சம்மேளனம் சாடல்

ஜெனிவா, பெப். 01

இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை மீறி செயல்படுகிறது என்று 116 நாடுகளை சேர்ந்த 188 அமைப்புகள் அங்கம் வகிக்கும் அமைப்பான மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சம்மேளனம் குற்றம் சுமத்

15

## சுதந்திர தின நிகழ்வை தமிழரசும் புறக்கணிக்கும்!

யாழ்ப்பாணம், பெப். 01

ஜனாதிபதி தலைமையிலான 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தை தமிழரசு கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் காங்கிரஸ் என்பன புறக்கணிக்கவுள்ளன என்று அறிவித்துள்ளன.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் 4ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

15

## இரா. சம்பந்தன் மருத்துவமனையில்!

கொழும்பு, பெப். 01

மூத்த தமிழ் அரசியல் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமையவே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

இரா. சம்பந்தன் வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைபாட்டால் பாதிக்கப் பட்டுள்ளார். அண்மைக்கால

15

### சாதாரண தரப் பரீட்சை:

## இணையம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்!

கொழும்பு, பெப். 01

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சைகளுக்கான விண்ணப்பத்தை இணைய வழியில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

15

## இராமாயண கால தலங்களை மேம்படுத்த இந்தியா உதவும்!

கொழும்பு, பெப். 01

இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இலங்கையிலுள்ள மத வழிபாட்டு தலங்களை மேம்படுத்துவதற்கு இந்தியா உதவிகளை வழங்கவுள்ளது.

இலங்கையில் மத வழிபாட்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இதற்கான உறுதிமொழியை இந்திய முயற்சியாண்மையாளர்கள் வழங்கியுள்ளனர்.

பிரதமர்

15

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலும் களமிறக்கம்!

கொழும்பு, பெப். 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வாய்ப்புள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து வெளியிட்ட அவர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மன்னிப்பு கோரினார் மைத்திரி!

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவேன் என்றும் அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

“2019 இல் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங் கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க மக்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோருகின்றேன்.”

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

15



## மைத்திரி கோரிய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளவேமாட்டோம்!

### கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மன்னிப்பு கோரியை தாம் ஏற்றுக் கொள்ளவில்லையென கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தபோது இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்திடமும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிடமும் நேற்று மன்னிப்பு கோரியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, தனது ஆட்சிக்காலத்தில் இவ்வாறானதொரு அனர்த்தம் இடம்பெற்றமைக்காக மன்னிப்புக் கோரினார்.

இந்த நிலையில், உயிர்த்த

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

ஒருநாள் அதிகாலை தொலைபேசி மணி அடித்தது. இந்த அகாலவேளையில் யாரடா என்று சலித்தவாறே தொலைபேசியை எடுத்தபோது எதிர்முறையில் நண்பர் முருகபூபதி பேசினார்.

அவுஸ்திரேலியாவில் வாழும் மூத்த எழுத்தாளர் - பத்திரிகையாளர் - விமர்சகர் என்று பன்முகம்கொண்டவர் அவர்.

சற்று பதற்றத்துடனேயே கேட்டார், "வித்தியருக்கு என்ன நடந்தது?", என்று. எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

'ஏன் என்ன?' என்றுகேட்டேன். 'இல்லை இன்று தனது பத்திரிகையில் நாளையிலிருந்து ஆசிரியர் பதவியிலிருந்து விலகுவதாக எழுதியிருக்கிறார்' என்றார் அவர்.

அப்போதுதான், 'அட இதுக்குத் தானா? என்றவாறு, அது வேறு ஒன்றுமில்லை, அவர் யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராக போட்டியிடவிருக்கிறார் என்று அறிந்தேன். அதற்காக இருக்கலாம்' என்றேன்.

அவருக்கு மேலும் ஆச்சரியமாக போய்விட்டது.

'என்ன, அந்த சாதாரண மேயர் பதவிக்காக பத்திரிகை ஆசிரியர் பதவியை விடுகின்றாரா?' என்று திரும்பவும் கேட்டார் முருகபூபதி.

ஊடக உலகில் 'ஊடக ஜாம்பவான்' என்று வர்ணிக்கப்படுபவர் நண்பர் வித்தியாதரன்.

கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பினராவதற்கான வாய்ப்பு அவரைத் தேடி வந்தபோது அதனை ஏற்க விரும்பாதவர். அந்த சந்தர்ப்பமே அவரின் உறவினர் ஒருவர் அந்தப் பதவிக்கு வர உதவியது என்பது வேறு கதை.

பின்னர் வடக்கு மாகாணத்துக்கு முதன்முதலில் தேர்தல் நடைபெற்ற போது, முதலமைச்சர் வேட்பாளராக அவரின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டதுண்டு.

இப்போது அவர் யாழ்ப்பாண மாநகர தேர்தலில் ஒரு வேட்பாளர். அவரைப்போல இன்னும் நாற்பத்து நான்கு பேர் வேட்பாளர்களாக இருக்கிறார்கள். அவர்களில் தற்போதைய மேயர் ஆனல்ட்டும் ஒருவர். முதலில் வித்தியின் பெயரை சிபாரிசு செய்தவர், யாழ்ப்பாண மாநகர நிர்வாகத்தில் மிகநீண்ட அனுபவமுள்ள அதன் முன்னாள் ஆணையாளர் - இந்நாள் வட மாகாண அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயா.

உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் யாழ். மாநகர சபைக்கான வேட்பாளர்களிலேயே மேயர் வேட்பாளர் யார் என்பதை முன்கூட்டியே அரசியல் கட்சிகள் அறிவிப்பது வழமை. கடந்த தேர்தலில் தமது மேயர் வேட்பாளர் ஆனல்ட் என்பதை சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்தது ஞாபகம்.

ஆனால், இந்த ஆண்டு அப்படி அறிவிப்பதில்லை என்று தமிழரசு கட்சி கடும் முடிவெடுத்துவிட்டது.

அது உட்கட்சி விவகாரம். ஆனால், யார் உங்களுடைய மேயர் வேட்பாளர் என்று தமிழரசின் எம். பி. சுமந்திரனிடம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் வைத்து ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டபோது அவர் அளித்த பதில் வித்தியாதரனை மாத்திரமல்ல, முழு ஊடகவியலாளர்களுக்கும் அபகீர்த்திக்குரியது.

'எங்களிடம் நாற்பத்தி ஐந்து வேட்பாளர்கள் இருக்கிறார்கள் அவர்கள் நாற்பத்தி ஐந்து பேரும் மேயர் வேட்பாளர்கள்தான்.' - இதுதான் சுமந்திரன் தெரிவித்த பதில்.

நாற்பத்தி ஐந்து பேரில் யார் மேயராகக்கூடியவர் என்பது உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டிருந்தால் கூட யார் அவர் என்பதை ஊடகவியலாளர்கள் தீர்மானித்திருப்பார்கள்.

மாநகர சபைக்கான வேட்பாளர்களைத் தேடி அலைந்தபோது ஒரு வட்டாரத்தில் போட்டியிட யாரும் முன்வரவில்லை என்றும், இதனால் 'ஒருவரை' அழைத்து வந்து கையெழுத்துப் போட வைத்ததாகவும் இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

வேட்பாளராக கையெழுத்துப் போட்ட அவருக்கு, அப்போது எதற்காக கையெழுத்து வைக்கின்றேன் என்பதே தெரிந்திருக்கவில்லை என்றும் கையெழுத்து வைத்த பின்னர் கையில் கொடுத்ததை வாங்கிக் கொண்டு அவர் சென்றுவிட்டார் எனவும் பின்னர் தெரியவந்தது.

அந்த வேட்பாளரும் நாற்பத்தி ஐந்து மேயர் வேட்பாளர்களில் ஒருவர்தான். அவரும் வித்தியாதரனும் அவருக்கு ஒரே மாதிரியாம்.

ஒரு காலத்தில் இந்த வித்தியாதரன், தனது பத்திரிகையில் எழுதி வந்த கருத்துகளுடன் இந்த ஊர்க் குருவிக்கு துளிகூட உடன்பாடு இருக்கவில்லை.

மாவையை கட்சித் தலைமைப் பதவியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று விரும்பியவர்களுடன் சேர்ந்து அவர் மாவை பற்றி எழுதிய கருத்துக்கள் அருவருக்கத்தக்கவை. வித்தியின் அந்தக் கருத்துக்களை படிக்காததால்தான் மாவை இன்றும் உயிருடன் இருக்கிறார் என்று ஒருவர் அண்மையில் எழுதியிருந்தது ஞாபகம்.

அதேவேளை, சுமந்திரன் பற்றி அவர் எழுதிய பல விடயங்களை - அவரை புகழ்ந்து எழுதிய சில வசனங்களை வாசித்தபோது சுமந்திரனுக்கே கூச்சமாக இருந்திருக்கலாம்.

இன்று வித்தி அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அல்ல. ஆனாலும் அவர் உருவாக்கிவிட்ட பல நூறுக் கணக்கான அவரின் ஊடக குழந்தைகள்தான் இன்று ஊடகங்கள் எங்கும் வியாபித்து நிற்கின்றனர்.

அவருக்கு இழைக்கப்படும் அவமானங்கள் - அவர்களுக்குமான அவமானம்தான்.!

இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது அவர் பற்றி அவரின் நண்பர் ஒருவர் தனது முகநூலில் எழுதிய குறிப்பு ஒன்றைப் பார்க்க முடிந்தது. மேயர் வேட்பாளர் என்று தன்னை அறிவிக்காததால் வித்தி தேர்தலில் இருந்து ஒதுங்கிறார் என்று சொன்னது அந்தத் தகவல். தேர்தலில் இருந்து அவர் ஒதுங்கினாலும், இனி அவர், தான் யாழ்ப்பாண மாநகர சபை தேர்தலில் அவர் போட்டியிடுகின்ற வட்டாரத்தில் வேட்பாளர். அவர் பிரசாரம் செய்யவில்லை என்றாலும்கூட அவரின் மாணாக்கர்கள் ஏதோஒரு வகையில் பிரசாரம் செய்து அவரை வெல்ல வைத்துவிடுவார்கள்!

- ஊர்க்குருவி

# தேர்தலை நிறுத்தும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி இதுவரை பணிக்கவில்லை

கொழும்பு, பெப். 01

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எந்த வகையிலும் மத்திய அரசின் செயல்பாடுகளில் தாக்கம் செலுத்தப்போவதில்லை. அவ்வாறிருக்கையில் தேர்தலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த சந்தர்ப்பத்திலும் ஆலோசனை வழங்கியிருக்க வாய்ப்பில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஜனாதிபதி ஊடகப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கவில்லை. அதற்கான சாட்சிகள் இருந்தால் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது கட்சிக்கும் அரசாங்கத்திலுள்ள ஏனைய தரப்பினருக்கும் தேர்தலுக்கு தயாராகுமாறே ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார். அதற்கமைய நாம் வேட்புமனுவை தாக்கல் செய்திருக்கின்றோம். வேட்பாளர்களை தெளிவூட்டுவதற்கான செயல்திட்டங்களையும் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இந்த தேர்தல் எந்தவகையிலும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புபடவில்லை. எனவே, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நியமனங்களை வழங்கல் அல்லது நீக்குதல் தொடர்பான தேர்தலாக அமையப் போவதுமில்லை - என்றார். (ஐ)

# பொதுக் கூட்டங்களை நடத்த முடியாத நிலையில் பெரமுன!

கொழும்பு, பெப். 01

பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்த முடியாத நிலையில் பொதுஜன பெரமுன உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்வது தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய இரு கட்சிகளும் ஏற்கனவே நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களை நடத்தி வருகின்றன. எனினும், பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் எவரும் எந்தவொரு பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்து நடத்தவில்லை.

தற்போது பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்வது மிகவும் சிரமமாக உள்ளதாக போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் தெரிவித்தனர் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் கூறியுள்ளன. கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பல பொதுக்கூட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன அண்மையில் தெரிவித்திருந்தது.

ஆனால், அவை எங்கு நடைபெறும் அல்லது முதலாவது பொதுக் கூட்டம் நடைபெறும் இடம் இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை - என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# பொருளுக்காக சண்டையிட்ட பிக்குகள் மருத்துவமனையில்!

கொழும்பு, பெப். 01

பொருள் ஒன்று தொடர்பில் இரு பிக்குகள் கடுமையாக மோதிக் கொண்டதில் அவர்கள் இருவரும் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறையில் உள்ள விகாரை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்த விகாரையின் விகாரதிபதியால் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த விகாரையை சேர்ந்த 18 வயதான இரு பிக்குகளே இவ்வாறு மோதிக் கொண்டனர். ஒருவருக்கு சொந்தமான பொருள் ஒன்று இரு மாதங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தது. இது தொடர்பிலேயே இரு பிக்குகளும் மோதிக் கொண்டனர் என்றும் தெரிய வந்தது. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் 80,720 வேட்பாளர்கள்!

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 80 ஆயிரத்து 720 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது.

இந்தநிலையில், இம்முறை தேர்தலில் 80 அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. இவற்றின் ஊடாக 80 ஆயிரத்து 720 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மக்கள் காங்கிரஸ் கட்சி யாழில் வேலை திட்டம்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி.

யாழ்ப்பாணம், பெப். 01

அகில இலங்கை மக்கள் காங்கிராஸ் கட்சியால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வரும் நாட்களில் மேலும் முன்னெடுக்கப்படும் - என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற உறுதியான நிலைப்பாடுகள் உரிய தரப்பினால் தெரிவிக்கப்படவில்லை. எனினும், தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையில் கட்சிகள் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமுமே இதற்கான பதிலை வழங்கவேண்டும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் எங்கள் கட்சியால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

Eelanadu ஈழநாடு
01.02.2023 புதன்கிழமை
பிலவ வருடம், தை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# 13 இல்லையென்றால் தனிநாடா?

13 இல்லையென்றால் தனிநாடா? இந்தக் கேள்வி சிங்கள ஆட்சியாளர்க்கு உரியதல்ல - மாறாக, இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான உரித்தை கொண்டிருக்கின்றனர் என்று கூறி வரும் இந்தியாவுக்கும், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்காக குரல் கொடுத்துவரும் அமெரிக்காவுக்குமான கேள்வியாகும். இலங்கையின் அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் வந்த கதையை மீண்டும் விபரிக்க வேண்டியதில்லை. ஆனால், ஒன்றைச் சொல்ல முடியும் - அதாவது, 13ஆவது திருத்தச்சட்டம் சாதாரணமாக கொண்டுவரப்படவில்லை. ஒருபுறம் தமிழ் ஆயுத இயக்கங்களின் வளர்ச்சிக்கு மத்தியில் இந்திய இராணுவ தலையீட்டின் விளைவாகவே 13ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதாவது, ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்னும் நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் ஜே. ஆர். ஜெயவர்த்தன தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வாக மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொண்டார்.

இந்த பின்புலத்தில்தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தலில் போட்டியிட்டு மாகாண சபை முறைமைக்கு வடிவம் வழங்கியது. ஒருவேளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் போட்டியிடாவிட்டால், மாகாண சபை முறைமையும் தமிழர்களுக்கு கிடைத்திருக்காது. ஏனெனில், விடுதலைப் புலிகள் மற்றும் தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய பிரதான அரசியல் அமைப்புக்கள் உட்பட ஏனையவர்கள் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஈ. பி. ஆர். எல். எவ். அந்த வரலாற்று பணியை ஏற்றுக்கொண்டது.

ஒருபுறம் ஜே. வி. பி. மற்றும் சிங்கள கடும்போக்குவாத அமைப்புக்கள் இந்தியாவின் பிரசன்னத்தையும் 13ஆவது திருத்தச்சட்டத்தையும் கடுமையாக எதிர்த்து கலகம் செய்துகொண்டிருந்த சூழலில் மறுபுறம் அதற்கு சமதையாக தமிழர் தரப்புகளும் அதனை ஆதரிக்க மறுத்திருந்தன. ஆனால், இப்போது அதே கட்சிகளே 13ஆவதை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உதவுமாறு இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் நிலைமை உருவாகியிருக்கின்றது. தமிழ் தலைமைகள் என்போர் தங்களின் கடந்த காலத்திலிருந்து பாடங்களை படித்திருப்பதன் விளைவாகவே இவ்வாறானதொரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இது ஒரு வாய்ப்பான தருணமாகும். 13 முழுமையாக அமுல்படுத்தி பின்னர் அதிலிருந்து பயணிக்கும் பொறிமுறையொன்றை அனைவருமாக இணைந்து காணமுடியும். ஆனால், மீளவும் தென்னிலங்கை அடிப்படைவாத சக்திகள் 13இற்கு எதிரான குரலோடு வெளியில் முகம் காட்டுகின்றன.

தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது திருத்தத்தை கொண்டுவந்த இந்தியா அதனை அமுல்படுத்துமாறு கோருகின்றது. ரணில் விக்கிரமசிங்கவும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவுள்ளதாகக் கூறுகின்றார். இதனை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கோருகின்றார். ஆனால், 13ஆவதை முழுமையாக அமுல்படுத்தினால் நாடு பிளவடையுமென்னும் பழைய - அதே தவறான கதைகளோடு, மீளவும் சிங்கள அடிப்படைவாதிகள் களமிறங்குகின்றனர்.

13ஆவது திருத்தச் சட்டம் போதாது அது திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதுதான் தமிழர் தரப்பின் நெடுநாள்வாதமாக இருக்கின்றது. ஆனால், ஒற்றையாட்சி அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தையே முழுமையாக அமுல்படுத்த முடியாதென்று வாதிட்டால் தமிழர்களுக்கான அரசியல் விமோசனம்தான் என்ன? தனிநாடா? ஐக்கிய இலங்கைக்குள் தீர்வில்லையென்றால், அவ்வாறானதொரு தீர்வை சிங்கள ஆளும் வர்க்கம் ஒருபோதுமே அனுமதிக்கமாட்டாதென்றால், தனிநாட்டையா சிங்கள ஆளும் வர்க்கம் விரும்புகின்றது? 13ஆவது திருத்தத்தையே அமுல்படுத்த முடியாவிட்டால் இலங்கையின் மீதான மென்மையான அழுத்தங்களின் பயன் என்ன? இதற்கு அமெரிக்காவிடமுள்ள பதில் என்ன? 13ஐ அமுல்படுத்துவதில் வெற்றிபெறமுடியாவிட்டால், இந்தியாவின் முன்னாலுள்ள அடுத்த தெரிவு என்ன? தமிழ் மக்களின் கௌரவத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

*சுதந்திர தினம் கரிநாள்:*

# மாணவர் போராட்டத்துக்கு த. தே. ம. முன்னணி ஆதரவு

*யாழ்ப்பாணம், பெப். 01*

*எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் 75ஆவது சுதந்திரநாள். அந்த நாள் தமிழர்களுக்கு கரிநாள். யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவளிக்கிறது என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்திருந்தார்.*

*நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*மேலும், 1505ஆம் ஆண்டில் தமிழ்த் தேசத்தின் ஒரு பகுதி தன் இறையாண்மையை இழந்தது. பின்னர் ஒல்லாந்தர் ஆங்கிலேயரிடமிருந்து விடுபட முன்னோர்கள் போராடினர். அதன் தொடர்ச்சியாக நாட்டின் இறைமை 1948ஆம் ஆண்டு சிங்களவருக்கு தாரைவார்க்கப்பட்டது.*

*எமது தமிழ்த் தேசம் இறைமை அங்கீகரிக்கப்பட்ட நிலையில் எப்போது அமைகிறதோ அப்போதே தமிழர்களுக்கு சுதந்திர தினமாக அமையும். கடந்த காலங்களில் கறுப்பு கொடிகளை கட்டி சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்தததைப் போன்று இந்த வருடமும் மேற்கொள்ள வேண்டும்.*

*2009 வரை தேசியத் தலைவர் தலைமையில் தமிழரின் இறைமைக்கான போராட்டம் நடைபெற்றது. தலைமைத்துவம் எனக்கூறுபவர்கள் சுதந்திர தினத்தில் சிங்கக் கொடிகளை ஏந்தியிருந்தனர். தமிழ் மக்கள் வெளிப்படுத்திய கடும் எதிர்ப்பால் அவர்கள்கூட தற்போது சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவிக்கும் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்*

*சுதந்திர தினத்துக்கு எதிராக யாழ். பல்கலையிலிருந்து கிழக்கு பல்கலைக்கழகம் வரையிலான எதிர்ப்பு பேரணிக்கு ஆதரவு வழங்கக் கோரி, கடந்த 26ஆம் திகதி யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் எம்முடன் கலந்துரையாடினர்.*

*இந்த பேரணியில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தெளிவாக முன்வைக்கப்படும் தருணத்தில் எமது ஆதரவை வழங்குவோம் எனக் கூறியிருந்தோம். பொங்கு தமிழ் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டதைப் போல் சமஷ்டி முறையில் தீர்வு வேண்டுமென அவர்களும் வலியுறுத்தியிருந்தனர்.*

*ஒற்றையாட்சிக்குள் மக்களை முடக்க முன்னெடுக்கின்ற ஒற்றையாட்சி முறையை நிராகரிக்க வேண்டும். 13ஆம் திருத்தச் சட்டம் தமிழர்களின் தீர்வுமல்ல. தீர்வுக்கான ஆரம்பமும் அல்ல என்ற விடயம் வலியுறுத்தப்பட வேண்டும். இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தோம். அவ்வாறான கோரிக்கைகளை போராட்டம் ஆரம்பிக்க முன்னர் வலியுறுத்தி அறிக்கை வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே நாம் ஆதரவு வழங்குவது தொடர்பில் சிந்திக்க முடியும் என்ற விடயத்தில் உறுதியாக உள்ளோம் - என்றார்.*

*(ஐ)*

# பாடசாலை மாணவர்க்கு சீருடை உரிய காலத்தில் வழங்கப்படும்!

**சுசில் பிரேமஜயந்த**

*கொழும்பு, பெப். 01*

*பாடசாலை சீருடைகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்படும் எனவும் சீருடை தேவையின் 70வீதம் மானியமாக சீன குடியரசில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும். இலங்கைக்கு ஏற்கனவே முதல் தொகுதி கிடைத்துள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.*

*வெள்ளவத்தை லிண்ட்சே மகளிர் கல்லூரியுடன் இணைந்த விசாகா மகளிர் கல்லூரியில் வகுப்பறை இடப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் நிர்மாணிக்கப்படும் நான்கு மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*மேலும், பாடசாலைகளின் பௌதிக வள அபிவிருத்தியுடன் கல்வியின் தர அபிவிருத்தியும் பேணப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் தினசரி நடைமுறை திட்டங்களை செயல்படுத்தி மாணவர்களின் ஒழுக்கத்தையும் மன உறுதியையும் வளர்த்து கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் அக்கறை காட்டுவதாகவும் தன்னம்பிக்கையை வளர்க்கும் வேலைத் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுவதாகவும் - அமைச்சர் மேலும் தெரிவித்தார்.*

*(ஐ)*


# பல்கலை. மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு

*யாழ்ப்பாணம், பெப். 01*

*யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் எடுக்கப்படும் சுதந்திர தினத்தை கரிநாளாக கடைப்பிடிக்கும் போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழக்குவதாக வட பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட பொது மக்கள், பெற்றோர், பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.*

*நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் சனிக்கிழமை கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினத்தை கரிநாளாகக் கடைப்பிடிக்க யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் அழைப்பு விடுத்திருந்தனர். அத்துடன், அன்றைய தினம் மட்டக்களப்புக்கு மக்கள் பேரணி ஒன்றையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தப் பேரணியிலும் தமது சங்கம் பங்கேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# கடலில் கருணாநிதிக்கு சின்னம்! பெரும் போராட்டங்கள் வெடிக்கும்!!

## நாம் தமிழர் சீமான் எச்சரிக்கை

சென்னை, பெப். 01

"கருணாநிதிக்கு பேனா நினைவு சின்னம் வைப்பதை எதிர்க்கவில்லை - ஏற்கிறோம். ஆனால், கடலுக்குள் வைக்கக் கூடாது. அவ்வாறு வைப்பதை வன்மையாக நாங்கள் கண்டிக்கிறோம் - எதிர்க்கிறோம். அது தான் நாம் தமிழர் கட்சி யின் நிலைப்பாடு" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

மேலும், இது தொடர்பாக ஓர் எச்சரிக்கையையும் அவர் விடுத்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வரும், தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதியின் பேனா நினைவுச் சின்னத்தை சென்னை மெரினாவில் கடலுக்கு நடுவில் நிறுவுவதற்கான கருத்துக் கேட்புக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடந்தது.

இதன் பின்னர் அவர் கருத்துக் கூறுகையில்,

"மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் என்ற பெயரில் கூட்டத்தை நடத்தி, அவர்களுக்கு ஆதரவான கருத்துகளை ஏற்பது, எதிர்க் கருத்து தெரிவித்தால், அதனை எதிர்த்து கூச்சலிடுவது என்பது ரொம்ப அநாகரிகம். அதற்கு எதற்காக கருத்துக் கேட்புக் கூட்டம், கட்சிக் கூட்டம் என்ற பெயரில் நடத்திவிட்டுப் போகலாம். எனவே, முதலில் அந்தச் செயலை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

ஐயா கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் வைப்பதை எதிர்க்கவில்லை, ஏற்கிறோம். ஆனால், கடலுக்குள் வைக்கக் கூடாது. அவ்வாறு வைப்பதை வன்மையாக நாங்கள் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம். இது தான் நாம் தமிழர் கட்சியின் நிலைப்பாடு.

சிலை வைத்தால் நாம் தமிழர் கட்சியின் சீமான் என்ன செய்வார் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, "சிலை வைக்க விடாமல் தடுத்து கடுமையான போராட்டங்களைச் செய்வேன். அதன்பிறகு வைத்தால் ஒருநாள் எங்கிருக்கிறது என்று தெரியாமலே போகும்" என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# ஆளுநரின் தேநீர் விருந்தில் பங்கேற்பு குறித்து விளக்கம்!

## முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை, பெப். 01

குடியரசு தினத்தையொட்டிய ஆளுநரின் தேநீர் விருந்து என்பது காலம் காலமாக உள்ள நடைமுறை மரபு. குடியரசு தினத்தன்று அதில் பங்கேற்றது மக்களாட்சியின் மாண்பைக் காப்பதற்கான பண்பே தவிர, அரசியல் பின்வாங்கலும் முன்வாங்கலும் இல்லை - இவ்வாறு குடியரசு தினத்தையொட்டி, ஆளுநர் ஆர். என். ரவி அளித்த தேநீர் விருந்தில் பங்கேற்றது ஏன் என்பது குறித்து முதல்வர் மு. க. ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார்.

'உங்களில் ஒருவன் - பதில்கள்' என்ற தலைப்பில் அவர் திங்கள்கிழமை வெளியிட்ட காணொலியில் கூறியிருப்பதாவது:

தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வெளியாகி இருப்பதுதான் அண்மையில் எனக்கான மிகவும் மகிழ்ச்சியான செய்தி.

இந்தியாவின் அலுவல் மொழியாக தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளும் ஆக வேண்டும் என தொடக்க காலத்திலிருந்து குரல் கொடுத்து வருகிறோம். அதே போல, நீதித் துறையில் அனைத்து சமூகங்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கை.

சட்டப்பேரவையில் ஆளுநருக்கு எதிராக தமிழக அரசு தீர்மானம் கொண்டு வரவில்லை. பேரவையில் ஆளுநர் படித்தது அரசின் உரை. அரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட உரை எந்த மாற்றமும் இல்லாமல் அவை குறிப்பில் இடம்பெற வேண்டும் என்பது தான் எனது தீர்மானம்.

இந்தத் தீர்மானத்தின் மூலம் அவை மாண்பும், மக்களாட்சித் தத்துவமும் நிலைநாட்டப்பட்டது.

குடியரசு தினத்தையொட்டிய ஆளுநரின் தேநீர் விருந்து என்பது காலம் காலமாக உள்ள நடைமுறை மரபு. குடியரசு தினத்தன்று அதில் பங்கேற்றது மக்களாட்சியின் மாண்பைக் காப்பதற்கான பண்பே தவிர, அரசியல் பின்வாங்கலும் முன்வாங்கலும் இல்லை. எந்த சமரசமும் இல்லை.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# அ. தி. மு. கவின் வேட்பாளர் இன்று அறிவிக்கப்படுவார்

சென்னை, பெப். 01

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிடும் அ. தி. மு. க. வேட்பாளர் குறித்த கேள்விக்கு இன்று மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும் என்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் வருகின்ற பிப்ரவரி 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று காலை தொடங்கியது.

இந்த தேர்தலில் தி. மு. க. கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் போட்டியிடுகிறார். அ. தி. மு. க. கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், நேற்று செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், அ. தி. மு. க. வேட்பாளர் குறித்த கேள்விக்கு நாளை (இன்று) மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், வாக்காளர்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் இடைத்தேர்தலில் அ. தி. மு. க. வெல்வது உறுதி எனவும் கூறியுள்ளார். (ஐ)

# காந்தியின் நினைவுதினம் ஆளுநர், முதல்வர் அஞ்சலி!



சென்னை, பெப். 01

மகாத்மா காந்தியின் நினைவு தினத்தையொட்டி சென்னையில் அவரின் உருவப் படத்துக்கு ஆளுநர் ஆர். என். ரவி, முதல்வர் மு. க. ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் மகாத்மா காந்தியடிகளின் சிலைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு ஆளுநர் ஆர். என். ரவி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியை ஆளுநர் தலைமையில் ஆளுநர் மாளிகை ஊழியர்கள் ஏற்றனர்.

இதைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது. உறுதிமொழியை முதல்வர் மு. க. ஸ்டாலின் வாசிக்க அமைச்சர்கள், அரசுத் துறை உயரதிகாரிகள், தலைமைச் செயலக ஊழியர்கள் பின்தொடர்ந்து வாசித்தனர்.

பெப்ரவரி - 01 புதன்கிழமை
சுபகிருது வருடம் - தை 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏகாதசி




**மேடம்**
முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். அந்நியர் கள் வழியே ஆதாயம் காண்பீர்கள். நினைத்த ஒன் றில் வெற்றி ஏற்படும். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும்.

**இடபம்**
மனதில் குழப்பம் வந்து செல்லும். செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். கவனம் தேவை. மனம் விரும்பியபடி செயல்படுவீர்கள். விஜபிகளின் ஆதரவால் நன்மை அடைவீர்கள்.

**மிதுனம்**
செலவுகள் அதிகரிக்கும். பொருளாதார நெருக்கடியால் தடுமாறுவீர்கள். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உறவினர்கள் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
செயல்களில் லாபத்தை காண்பீர்கள். எதிர்பாராத வரவு உண்டு. நேற்றுவரை இழுபறியாக இருந்த வேலைகள் இன்று முடிவிற்கு வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். தொழிலில்

**சிம்மம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். வேலையில் இருந்த இழுபறி விலகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு அதில் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**
பணியிடத்தில் உண்டான நெருக்கடிகள் விலகும். மனம் தெளிவாகும். விஜபிகளின் ஆதரவால் நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
பயணத்தில் கவனம் தேவை. முயற்சிகள் இழுபறியாகும் என்பதால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். நீங்கள் அமைதியாக இருந்தாலும் பிரச்னைகள் உங்களைத் தேடி வரும்.

**விருட்சிகம்**
நண்பர்கள் உதவியுடன் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். வழக்கு விவகாரங்கள் வெற்றியாகும். திட்டமிட்டிருந்த ஒரு செயல் வெற்றியாகும். சுறுசுறுப்பாக செயல்பட்டு செயலில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு**
எதிரிகளின் செயல்களை முறியடிப்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மேலதிகாரி உங்களை பாராட்டுவார். மறைமுகமாக தொல்லைக் கொடுத்தவர்களை அடையாளம் காண்பீர்கள்.

**மகரம்**
எதிர்பார்த்த ஒன்று கடைசி நேரத்தில் உங்கள் கை நழுவிச் செல்லும். மனம் சங்கடம் அடையும். முயற்சியில் தடைகளும் தாமதமும் உண்டாகும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி நிலை ஏற்படும்.

**கும்பம்**
அரசு வகையிலான எதிர்பார்ப்பு இழுபறியாகும். கணக்கு வழக்குகளில் கவனம் தேவை. நீங்கள் எதிர்பார்த்த ஒன்று ஏமாற்றம் அளிக்கும். வேலைப் பளுவின் காரணமாக சோர்வு அடைவீர்கள்.

**மீனம்**
முயற்சிகள் வெற்றியாகும். பயணத்தால் நன்மையும் உறவுகளால் ஆதாயமும் அடைவீர்கள். எதிர்பார்த்த செய்தி வரும். துணிவுடன் செயல்பட்டு ஒரு பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோக ரீதியாக பயணம் மேற்கொள்வீர்கள்.

# பொருட்கள், சேவைகளை கடனுக்கு பெறவேண்டாம்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு

கொழும்பு, பெப். 01

**கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரச அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.**



அரசின் வரவு மற்றும் செலவு மதிப்பீட்டை விட குறைவாக இருப்பதால், அரசு செலவினங்களை குறைக்குமாறு அமைச்சர்கள் குழுவுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரியில் அரச வருமானச் செலவு மதிப்பீட்டை விடக் குறைவாக இருந்ததால் அரச செலவினங்களைக் குறைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமானம் அனைத்து செலவுகளுக்கும் போதாது எனவும், சம்பளம் மற்றும் ஓய்வூதியம், நலன்புரி, மருந்துகள் மற்றும் கடன் சேவைகளை மட்டுமே ஈடு செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# புதிய சொகுசு ரயில் சேவை பெப்ரவரி 14 இல் ஆரம்பம்

கொழும்பு, பெப். 01

கொழும்பிலிருந்து பதுளை வரை புதிய சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சொகுசு ரயில் சேவை பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது.

இந்த ரயில் சேவை பிரதி செவ்வாய் கிழமைகளில் கொழும்பிலிருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு எல்ல ஊடாக மாலை 4.00 மணிக்கு பதுளையை அடைந்து மறுநாள் காலை 6.00 மணிக்கு புறப்பட்டு மாலை 6.00 மணிக்கு கொழும்பை அடையும்.

இந்த ரயிலின் நட்சத்திர வகுப்பில் காலை உணவு, மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணத்தின் போது ரம்புக்கனை, பேராதனை சந்தி, நாவலப்பிட்டி, ஹற்றன், சென்ட் கிளேர் நீர்வீழ்ச்சி, நானுஓயா எல்ஜின் நீர்வீழ்ச்சி, பட்டிப்பொல ரயில் நிலையம் ஆகிய பிரதேசங்களில் ரயில் நிறுத்தப்படும்.

இந்த பயணத்தின்போது கண்டி ரயில் நிலையத்தில் கலை கலாசார நிகழ்ச்சியை காணும் வாய்ப்பும் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,பெப். 01

சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தின் புனிதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சமூகத்தில் நலிவடைந்தவர்களை வலுப்படுத்தும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 01

சமூகத்தில் நலிவடைந்தவர்களை வலுப்படுத்துவதற்கான வைகறை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



இதில், கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், 2023 ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களான மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றவை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள பெயார் மெட் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் பரத்சுந்தர், பெயார் மெட் நிறுவனத்தின் இணைப்பாளர் வைத்தியர் நயனி சூரியாராச்சி, மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.நிக்கொலஸ்பிள்ளை , உதவி மாவட்ட செயலாளர் எஸ்.சி.என்.கமலராஜன் மற்றும் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

# மின்சார சபைக்கு பணம் செலுத்த இலகு திட்டம்

கொழும்பு, பெப். 01

இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தும் ஒன்லைன் முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தடைப்பட்ட இந்த முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எதிர்காலத்தில் இலகுவான முறையில் மக்கள் கட்டணங்களைச் செலுத்த முடியும் எனவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை ஈழநாடு

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஊடகவியலாளர் நிபோஜனுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, பெப். 01

ரயில் விபத்தில் உயிரிழந்த ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜனுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் 2171 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது அன்னாரின் உருவப்படத்திற்கு தீபமேற்றியும் பூக்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜன் நேற்று முன்தினம் தெஹிவளையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# 50 சதவீதமான நீரிழிவு நோயாளர் அடையாளம் காணப்படவில்லை!

கொழும்பு, பெப். 01

இலங்கையில் 50 சதவீதமான நீரிழிவு நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது கண்டறிப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சமிந்தி சமரக்கோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிகழும் மரணங்களில் 83 வீதமானவை தொற்றா நோய்களால் பதிவாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாத காரணத்தினால் நோயாளர்களுக்கு சிறுநீரக நோய் அல்லது மாரடைப்பு ஏற்படுவதாக அவர் கூறினார்.

சில நோயாளர்கள் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுவதாகவும் வைத்தியர் சமிந்தி சமரக்கோன் குறிப்பிட்டார். (அ)

# 13ஐ நடைமுறைப்படுத்தினால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்

## பௌத்த தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

**கொழும்பு, பெப். 01**

**13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் என கோரி எல்லே குணவன்ச தேரர் மற்றும் பெங்கமுவே நாலக தேரர் ஆகியோர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.**

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட சில அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின் அது நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவால் திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தம் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மூலோபாயத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையின் பாராளுமன்றத்தில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே 13 ஆவது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பின்றி முழுமையாக அமுல்படுத்தவேண்டாம் எனவும் உள்நாட்டு வளங்கள் மற்றும் சொத்துக்கள் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதை உடனடியாகத் தடுக்கவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு மூலம் நாட்டுக்கு இழந்த செல்வம் மற்றும் வளங்களை மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கு ஏற்றுமதியை அதிகரிப்பது, அரச செலவீனங்களைக் குறைப்பது அவசியம் என்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களை வலுப்படுத்த எந்தவொரு மூலோபாயத் திட்டங்களை முன்வைக்குமாறும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(அ)

# தினேஷ் ஷாப்டர் கொலை வழக்கை விசாரிக்க மேலும் 2 பொலிஸ் குழுக்கள்!

*கொழும்பு, பெப். 01*

வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு மேலும் இரண்டு குழுக்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நியமித்துள்ளது.

ஷாப்டரின் தொலைபேசி பதிவுகளை மதிப்பீடு செய்வதற்கும் தடயவியல் பகுப்பாய்வு செய்வதற்கும் இரு குழுக்களும் நியமிக்கப்பட்டன.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி பொரளை மயானத்தினுள் தினேஷ் ஷாப்டர் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் மற்றும் அவரது கைகள் வாகனத்தில் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

அவரைக் கண்டுபிடித்த சக ஊழியர், ஷாப்டரை கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதித்தார்.

எனினும், 51 வயதான தினேஷ் ஷாப்டர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

வாகனத்திற்குள் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை பொலிஸார், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவு, கொலைப் புலனாய்வுப் பிரிவினர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)



# மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவோருக்கு பயிற்சி

*கிளிநொச்சி, பெப். 01*

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடவுள்ள பணியாளர்களிற்கு பயிற்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் டாஸ் நிறுவனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான முறையில் கண்ணிவெடிகளை கண்டறிந்து அகற்றுவது தொடர்பிலும், பாதுகாப்பு முறைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது பயிற்றுவிக்கப்படுகின்றது.

ஜப்பான் மக்கள் மற்றும் அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் குறித்த பணியாளர்கள் மனிதநேய பணியில் ஈடுபடவுள்ளனர்.

குறித்த பகுதியில் இந்த மனிதநேய பணியில் இதுவரை 400 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதுடன், இந்த பயிற்சியின் ஊடக மேலும் 70 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ)

# கரு ஜயசூரியவுக்கு உயரிய விருது

*கொழும்பு, பெப். 01*

இலங்கையில் வழங்கப்படும் மிக உயரிய விருதான ‘இலங்கையின் பெருமை’ விருது இம்முறை தேசபந்து கரு ஜய சூரியவுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் மிகவும் சிறப்பான சேவைகளைப் புரிந்த இலங்கைப் பிரஜைகளுக்கும், இலங்கையரல்லாத நபர்களுக்கும் அவரது வாழ்நாளில் ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படுகின்ற தேசிய விருது வழங்கல் 1986 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கி வருவது மரபாகவுள்ளது.

அதற்கமைய, சிறிலங்காபிமானய ‘இலங்கையின் பெருமை’ விருது எமது நாட்டில் வழங்கப்படுகின்ற உயர் தேசிய கௌரவ விருதாகும். தேசபந்து கரு ஜயசூரிய ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாக அவருக்கு சிறிலங்காபிமானய ‘இலங்கையின் பெருமை’ விருதை நாளை மறுதினம் வழங்கிக் கௌரவிப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

(அ)

# பல்கலைக்கழக மாணவர்களின் பேரணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு!

*மட்டக்களப்பு, பெப். 01*

எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள, சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு கறுப்பு தினம் என்ற பிரகடன போராட்டம் மற்றும் பேரணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு வழங்குவதோடு வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் சுதந்திர தினத்திற்கெதிராகக் கிளர்ந்தெழவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் 75வது சுதந்திரதினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் கொண்டாடப்படவுள்ளது. வருடா வருடம் இதனை அரசு கொண்டாடிக் கொண்டு வருகிறது. ஆனால் இந்தச் சுதந்திம் அடைந்த நாளில் இருந்து இன்று வரைக்கும் தமிழ் மக்கள் அடக்கியொடுக்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற பாரியதொரு இனக்கலவரம் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை வீறு கொண்டு எழ வைத்தது. அன்று தொடக்கம் தமிழர்களின் சுயாட்சிக்காக இந்த நாட்டில் சேர்ந்து வாழ முடியாது என்ற ரீதியில் தனிநாடு கோரி போராடியிருந்தார்கள். 2009 மே 18 அந்தப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.

ஆனாலும் இன்றவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு ஜனநாயக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் போராடிக் கொண்டு வருகின்றது.



இந்த வேளையிலே எதிர்வரும் 4ஆம் திகதி 75ஆவது ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் இலங்கையில் புரையேடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வைத் தருவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திலும் வெளியிலும் தெரிவித்து சர்வகட்சி மாநாடுகளை நடத்தி தமிழ்க் கட்சிகளுடனும் அவ்வப்போது பேசிக் கொண்டு வருகின்றார்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் கூட கிழக்கில் ஐந்து வருடங்களாகவும் வடக்கில் நான்கு வருடங்களாகவும் நடைபெறாமல் இருக்கின்றது. தற்போதைய அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக அமுல்படுத்தி அச்சட்டத்தில் உள்ளடங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அனைத்தும் முறையாகப் பகிரப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று இந்தியா முழுமையான அழுத்தம் கொடுத்து வருகின்றது. அண்மையில் இலங்கை வந்த வெளிவிவ கார அமைச்சரும் அதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

எனவே சுதந்திரம் இல்லாத நாட்டில் தமிழர்களாகிய எமக்கு கிடைக்காத சுதந்திர தினத்தைக் கொண்டா டவேண்டிய தேவை இல்லை. அந்த வகையில் வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி வடக்கிலிருந்து கிழக்குக்கு ஒரு கண்டனப் பேரணியை நடத்துகிறார்கள்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகிய நாங்கள் அந்தப் பேரணிக்கு முழு ஆதரவையும் கொடுப்பது மாத்திரமல்லாமல், அவர்களுக்குப் பக்க துணையாக இருந்து இந்தச் சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிப்பதுடன், வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இந்தச் சுதந்தர தினத்திற்கு எதராகக் கிளர்ந்தெழ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

(அ)

# வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதில் குழப்பம்

## ரூ. 100 மில்லியன் முற்பணம் கோருகின்றது அரச அச்சகம்

கொழும்பு, பெப். 01

நதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வாக்குச்சீட்டுகளை அச்சிடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து அரச அச்சகத் திணைக்களம் 100 மில்லியன் ரூபாவை முற்பணமாக கோரியுள்ளது. அத்துடன் தேர்தல் ஆணைக்குழு அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு 18 மில்லியன் ரூபா நிலுவைப் பணத்தை வழங்க வேண்டியுள்ளது என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் உள்ளிட்ட வேறு நடவடிக்கைகளின் போது அரசாங்க அச்சகத் திணைக்களம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு வழங்கியுள்ள சேவைக்காக இந்தப் பணத்தை வழங்க வேண்டியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அதேவேளை, அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தேவையான நிதியை அந்த திணைக்களம் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதுபோன்று அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு பல் வேறு நிறுவனங்கள் மூலமும் கிடைக்கவேண்டிய நிலுவைப் பணத்தை அளவிடுவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வாக்குச்சீட்டுகளை அச்சிடுதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து அரசாங்க அச்சகத் திணைக்களம் 100 மில்லியன் ரூபாவை முற்பணமாக கோரியுள்ள நிலையில் அந்த நிதியையும் தேர்தல் ஆணைக்குழு இதுவரை வழங்கவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பஸ்ஸில் இருந்து கேரள கஞ்சா மீட்பு

## 4 பேர் கைது

மன்னார், பெப். 01

மன்னாரில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் திங்கட் கிழமை பகல் மன்னார் பிரதான நுழைவாயிலில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து கேரளக் கஞ்சா பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றில் கஞ்சா பொதிகள் இருப்பதாக தள்ளாடி இராணுவ தலைமையகத்துக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலை அடுத்து நேற்று முன்தினம் பகல் 12 மணி அளவில் குறித்த தனியார் பஸ் மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டு, மோப்ப நாயின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த பஸ்ஸின் பின் ஆசனத்துக்கு முன் பகுதியில் உள்ள ஆசனத்தின் கீழே காணப்பட்ட இரும்புப் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்ட பொதி ஒன்றை எடுத்துச் சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த பொதியில் கேரள கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 380 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு குறித்த பொதியில் இருந்து மீட்கப்பட்டது.

குறித்த பஸ்ஸின் பின் இருக்கையில் இருந்த 4 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சமூக பாதுகாப்பு வரி சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, பெப். 01

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்திற்கு பல திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன்படி, மேற்படி சட்டத்தில் திருத்தங்களை முன்வைப்பதற்கும், அதற்கான வரைவு சட்டமூலத்தை தயாரிப்பதற்கும், சட்ட வரைவுகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் கீழ், வரி விதிக்கக்கூடிய நபர்களுக்கு 2.5 வீத சமூகப் பாதுகாப்பு வரி விதிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள், சிறப்புத் தேவைகள் கொண்ட நபர்களின் பயன்பாட்டிற்கான ஆட்டோமொபைல் மற்றும் உபகரணங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் சமூகப் பாதுகாப்பு வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளன. (அ)

# வவுனியா வர்த்தகரிடம் நிதி மோசடி; 2 மில்லியன் ரூபாவுடன் இருவர் கைது

வவுனியா, பெப். 01

வவுனியா - மதவாச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வர்த்தகர் ஒருவரைத் தொடர்பு கொண்டு எண்ணெய் மற்றும் டீசல் விநியோகத்திற்கான சட்டபூர்வ விலைமனுக் கோரல் பெற்று தருவதாக கூறி 2 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் 2 மில்லியன் ரூபாய் பணத்துடன் பூனாவ கடற்படை முகாமுக்கு அருகில் தம்மை சந்திக்குமாறு வர்த்தகருக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த வர்த்தகர் கடற்படை முகாமுக்கு அருகில் வந்தபோது சந்தேக நபர்கள் தங்களை கடற்படை அதிகாரிகளைப் போல அறிமுகப்படுத்திக்கொண்டதுடன் லொறியில் சென்றிருந்த வர்த்தகர் மற்றும் அவரது உறவினரின் தேசிய அடையாள அட்டைகளையும் பெற்றுக் கொண்டனர்.

கடற்படை முகாமுக்குள் நுழைவதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளும் போர்வையில் சந்தேக நபர்கள் நுழைவாயிலுக்கு அருகில் சென்றதுடன் பிரதான சந்தேக நபருடன் மோட்டார் சைக்கிளில் வந்த மற்றைய நபர் வர்த்தகரிடம் இருந்து 2 மில்லியன் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

பணத்தை பெற்றுக்கொண்ட சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளைப் பின்தொடருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

லொறிக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேக நபர்கள் கடற்படை முகாமின் நுழைவாயிலுக்குள் செல்வதைத் தவிர்த்து வேறு திசையை நோக்கி வாகனத்தை செலுத்தித் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது லொறிச் சாரதி சந்தேக நபர்களை துரத்தியுள்ளனர். அதே நேரத்தில் சந்தேக நபர்களை பூனாவ பொலிஸ் சோதனைச் சாவடியில் நிறுத்துமாறு பொலிஸாரினால் சைகை காண்பிக்கப்பட்டது. ஆயினும் அவர்கள் அதனை மீறி சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மதவாச்சி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சந்தேக நபர்கள் பணத்துடன் மதவாச்சி, இக்கிரிகொல்ல பாடசாலைக்கு அருகில் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 32 வயதுடைய இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் இராணுவ சாரதி ஆவார்.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி மற்றும் பூனாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேர்தல் கடமைக்கு எரிபொருள் இல்லை

கொழும்பு, பெப். 01

தேர்தல் கடமைகளுக்குத் தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளுக்காக மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு போதிய எரிபொருள் இல்லாததால், பல மாவட்டங்களில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு கடும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கனிய எண்ணெய் கூட்டுத்தாபன அதிகாரிகள் தேர்தல் ஆணைக் குழுவுக்கு வரவழைக்கப்பட்டு தேர்தலுக்குத் தேவையான எரிபொருளைப் பெறுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆனால் தேர்தல் ஆணைக் குழு கோரியபடி எரிபொருளை வழங்கமுடியாது என கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் தேர்தல் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது. (அ)

# நியாயமற்ற வரி அதிகரிப்பை இந்த வாரத்துக்குள் நிறுத்துக!

## தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 01

நியாயமற்ற வரி அதிகரிப்பை நிறுத்துவதற்கு இந்த வாரத்திற்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்படாவிடின், எதிர்வரும் வாரத்திலிருந்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்து கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, துறைமுகத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து இன்று ஒன்றுகூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொது ஊழியர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் நிரோசன் கொரகானஹே தெரிவித்தார். (அ)

# மதவாச்சியில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் சிக்கினார்

கொழும்பு, பெப். 01

பலாத்கார வழக்கு விசாரணையை தீர்ப்பதற்காகவும் பிடியாணையை நிறைவேற்றாமல் இருக்கவும் ஒருவரிடமிருந்து மூன்றரை இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் மதவாச்சி பொலிஸ் பிரிவின் சார்ஜன்ட் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

குறித்த சார்ஜன்ட், மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த முறைப்பாட்டாளரின் வீட்டுக்கு பணத்தைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோதே இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். (அ)

# ஹோட்டல் மாடியில் இருந்து விழுந்த காசாளர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 01

கெஸ்பேவயில் உள்ள மூன்று மாடி ஹோட்டல் ஒன்றின் உச்சியில் இருந்து தவறி விழுந்து ஹோட்டலின் காசாளர் உயிரிழந்துள்ளார் என கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

தெனிப்பிட்டிய வரகாபிட்டிய பிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ரித்மா தரங்க என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சுமார் இரண்டரை வருடங்களுக்கு மேல் குறித்த விடுதியில் பணிபுரிந்து வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 11 மணியளவில் ஹோட்டல் மூடப்பட்டதாகவும், அதிகாலை 2 மணியளவில் ஹோட்டலுக்கு முன் காசாளர் இரத்தம் தோய்ந்த நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதைப் பணியாளர் ஒருவர் பார்த்த நிலையில், ஹோட்டல் உரிமையாளருக்கு அறிவித்ததையடுத்து, சில நிமிடங்களில் அவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அரை மணித்தியாலத்தின் பின்னர் குறித்த இளைஞன் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் இரவு வெகுநேரம் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)



# பொதுவெளி ஒழுக்கம்: தி. மு. க. அமைச்சர்கள் சிலர் இப்படி நடந்து கொள்வது ஏன்?

நந்தினி வெள்ளைச்சாமி

திமுக மூத்த அமைச்சர்கள் கட்சி நிகழ்ச்சிகளில் நிர்வாகிகள் மீது கடுமையாக நடந்துகொள்ளும் சம்பவங்களும் “என்னையே தூங்க விடாமல் செய்கின்றன” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டது போன்ற பேச்சுக்களும் தொடர்ந்து வருகின்றன.

சமீபத்தில் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே. என். நேரு, விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கைகொடுக்க வந்த தொண்டர்களை வேகமாக தடுத்து நிறுத்தும் வீடியோ வெளியானது. கடந்த வாரத்தில் திருவள்ளூரில் பால்வளத்துறை அமைச்சர் நாசர் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில், ஒரு நாற்காலியை மட்டும் எடுத்துவந்த நிர்வாகியை நோக்கி கல் வீசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இந்த சம்பவங்களை அதிமுக, பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன. தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, “இந்திய வரலாற்றில் மக்கள் மீது கல் எறியும் அமைச்சரை பார்த்திருக்கிறீர்க ளா?” என்றும் “மக்களை தாக்குவதற்கு திமுக அமைச்சர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டிருப்பார்கள் போல தெரிகிறது” என்றும் விமர்சித்திருந்தார்.

இதற்கு நடுவில், ஜனவரி 28 அன்று சேது சமுத்திர திட்டம் குறித்து திராவிடர் கழகம் நடத்திய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய திமுக பொருளாளர் டி. ஆர். பாலு, “திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி மீது யாரேனும் கை வைத்தால் அவரின் கையை வெட்டுவேன், எனக்கு அதற்கான பலம் இருக்கிறது” என பேசியது சமீபத்திய சர்ச்சையானது,



இதற்கு முன்பும் இத்தகைய சர்ச்சை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தம்மைச் சந்திக்க வந்த நரிக்குறவர் சமூகத்தின் பிரதிநிதியை வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் அவமதித்து விட்டதாக விமர்சனங்கள் எழுந்தன.

இதேபோல, இலவச பேருந்து சேவை குறித்தும் திமுக துணை பொதுச் செயலாளரும் உயர்கல்வித்துறை அமைச்சருமான க. பொன்முடி பேசிய காணொளிகளும் வைரலாகி விமர்சனத்திற்குள்ளாயின.

இதைத்தொடர்ந்து, செப்டம்பர் மாதம் நடந்த திமுக பொதுக்குழுக் கூட்டத்தில், முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், “மத்தளத்திற்கு இருபக்கமும் அடி என்பது போல் என் நிலைமை இருக்கிறது. கட்சியினர் மற்றும் அமைச்சர்களின் செயல்பாடுகள் என்னைத் தூங்கவிடாமல் செய்கிறது. நாள்தோறும் காலையில் நம்மவர்கள் யாரும் எந்தப் புதுப் பிரச்னையையும் உருவாக்கி விடக்கூடாதே என்ற நினைப்போடுதான் நான் கண்விழிக்கிறேன்” என பேசியிருந்தார்.

அவருடைய இந்த பேச்சுக்குப் பின்பும் அமைச்சர்கள் இப்படி நடந்துகொள்வதும் பேச்சுக்களும் தொடர்வது ஏன்?

**மிக சாதாரணமான சம்பவங்கள்**

திமுக செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரனிடம் இந்த கேள்வியை முன்வைத்தோம்.

“இந்த சம்பவங்கள் எல்லாம் மிகச் சாதாரணமானவை. எதிர்க்கட்சியினர் இதனை பெரிதுபடுத்துகின்றனர். அரசியல் - தத்துவார்த்த ரீதியாக அவர்களால் எங்களுடன் மோத முடியவில்லை. பள்ளியில் பாடங்களை கவனிக்காத மாணவர் மீது ஆசிரியர் சாக்பீஸ் எறிவார், குடும்பத்திலும் பிரச்னை என்றால் டிவி ரிமோட்டை தூக்கி எறிவோம். அதுபோன்றுதான் இவையும். இவை ஒழுங்கீனமான, அருவருக்கத்தக்க செயல்கள் அல்ல. அதற்காக ஒரு கட்சியையே குறை சொல்லக்கூடாது.

குறிப்பிட்ட காலத்திற்கு வேண்டுமானால் இதனை பேசலாம். ஆனால், மக்கள் இதனை பொருட்டாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அமைச்சர்கள் தங்கள் கட்சி தொண்டர்களிடம் தான் அப்படி நடந்துகொள்கின்றனர். கட்சிக்காரர்களை நாங்கள் சமாதானம் செய்துகொள்வோம். இவையெல்லாம் சிறிய பிணக்குகளே,” என தெரிவித்தார்.

சமூக வலைதளங்களில் இத்தகைய காணொளிகளை காணும் இளைய தலைமுறையினர் இடையே திமுக மீது எதிர்மறை எண்ணத்தை இவை ஏற்படுத்தாதா, கட்சிக்குப் பின்னடைவாக இருக்காதா என கேட்டபோது, “இன்றைக்கு இருக்கும் இளைஞர்களுள் பகுத்தறிவுடன் சிந்திப்பவர்களாக இருக்கின்றனர். அவர்கள் இதனை பெரிதுபடுத்தமாட்டார்கள்.

இத்தகைய சம்பவங்களை மட்டும் வைத்து அவர்கள் மதிப்பிடுவதில்லை. முதலமைச்சரின் நடவடிக்கைகளை அவர்கள் பார்க்கின்றனர், விழிப்புணர்வுடனேயே இருக்கிறார்கள். நாம் பேசும் ஆக்கபூர்வமான கருத்துகளே காலத்திற்கும் நிற்கும். இத்தகைய சிறுசம்பவங்கள் நிலைத்திருக்காது. எனினும், இச்சம்பவங்கள் சிறிய சேதத்தை ஏற்படுத்தும்” என தெரிவித்தார்.

திமுக தலைவர்கள் மட்டுமின்றி, அதிமுக, பாஜக தலைவர்களும் பல்வேறு நிகழ்ச்சிகளில் செய்தியாளர் சந்திப்புகளில் கோபத்துடன் நடந்து கொள்ளும் சம்பவங்களும் உண்டு.

எதிர்க்கட்சி துணை தலைவர் ஓ பன்னீர்செல்வத்தை நீக்கிவிட்டு, அந்த பதவியில் ஆர்.பி. உதயகுமாரை நியமிக்க வேண்டும் எனக்கோரி, கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற அதிமுக உண்ணாவிரதப் போராட்டத்தின்போது, நிர்வாகி ஒருவரை எடப்பாடி பழனிசாமி ஒருமையில் பேசி கோபத்தை வெளிப்படுத்தினார்.

அதேபோன்று, அதிமுக ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜி, தலித் சிறுவன் ஒருவரை தனக்கு காலணி மாட்டிவிடுமாறு கூறியது, மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசனை கடுமையான முறை யில் விமர்சித்தது என பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ளார்.

பாஜகவிலும் இதே போக்கு சில நிகழ்வுகளில் பதிவாகியிருக்கிறது. தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, செய்தியாளர் சந்திப்புகளில் நிருபர்களை எதிர் கேள்வி கேட்கும் விதமும் கோபத்துடன் அவர்களை அணுகும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

“குரங்கு மாதிரி ஏன் என்னையே சுற்றிவருகிறீர்கள்?” என செய்தியாளர்களை பார்த்து அவர் கேள்வி கேட்டதும் சர்ச்சையாகியிருந்தது.

இவை குறித்து அதிமுக, பாஜகவை சேர்ந்தவர்களிடம் பேசினோம்.



**யார் செய்தாலும் தவறுதான்**

அதிமுக முன்னாள் அமைச்சர் பா. வளர்மதியிடம் பேசுகையில், “அந்தந்த கட்சி தலைவர்கள்தான் இத்தகைய நிகழ்வுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளோ, பேச்சோ யார் செய்தாலும் தவறுதான். நான் செய்தாலும் தவறானதுதான். யாரும் இதனை சரி என சொல்ல மாட்டார்கள்” என தெரிவித்தார்.

இதனால், குறிப்பிட்ட தலைவர்கள் சந்திக்கும் விமர்சனங்கள் குறித்துப் பேசிய அவர், பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டால் இம்மாதிரியான விமர்சனங்களை தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். அவற்றை பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மக்கள் இத்தகைய சம்பவங்களை தவறாகத்தான் நினைப்பார்கள். நான் அரசியலில் இருக்கிறேன், நான் கொஞ்சம் அடாவடி யாக நடந்துகொண்டால் என்னைப் பார்த்து முகம் சுழிக்கத்தானே செய்வார்கள். அதனை யாரும் சரி யென்று சொல்ல மாட்டார்கள். கட்சியை கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அதிமுகவில் பலமுறை எடப்பாடி பழனிசாமி இதுகுறித்து அறிவுறுத்தியி ருக்கிறார். மக்கள் அருவருக்கத்தக்க வகையில் நடந்துகொள்ளக் கூடாது என கூறியிருக்கிறார்” என தெரிவித்தார்.

**கேள்வி கேட்பதில் தவறில்லை**

பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் குஷ்பு திமுக அமைச்சர்களின் நடவடிக்கைகள் குறித்து கூறுகையில், “ஆட்சி, அதிகாரத்தில் இருக்கும் தைரியத்தில்தான் இப்படி செய்கின்றனர். நாம் என்ன செய்தாலும் மக்கள் நமக்குத்தான் ஓட்டு போடுவார்கள் என எண்ணுகின்றனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள், மக்களுக்காக சேவை செய்பவர்கள். அவர்கள் அப்படி நடக்கக்கூடாது” என தெரிவித்தார்.

அண்ணாமலை உள்ளிட்ட பாஜக தலைவர்கள் இத்தகைய முறையில் நடப்பது குறித்து கேள்வி எழுப்பிய



போது, “பத்திரிகையாளர்கள் எங்களை கேள்வி கேட்டால், அவர்களுக்கு பதில் கொடுப்பதற்கோ அல்லது அவர்களிடம் கேள்வி கேட்பதற்கோ உரிமை உண்டு. ஜனநாயகத்தில் அதற்கு இடம் உண்டு. அண்ணாமலை கேள்வி கேட்டதில் எந்த தவறும் இல்லை. கட்சியில் இதற்கு எந்த எதிர்வினையும் இல்லை. அவர் துணிச்சலாக பேசுவதை நாங்கள் பலமாக கருதுகிறோம். அவர் பயப்படாமல் கேள்வி கேட்கிறார்” என தெரிவித்தார்.

அதிமுக, பாஜகவில் உள்ள தலைவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் ஆனால் ஆட்சி அதிகாரத்தில் உள்ள திமுகவின் மூத்த தலைவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது காலப்போக்கில் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என்கிறார், பத்திரிகையாளர் மணி.

“அண்ணாமலை என்ன வேண்டுமானாலும் பேசுவார், இழப்பதற்கு அவரிடம் எதுவும் இல்லை. ஆனால், திமுக ஆட்சியில் இருக்கிறது. இப்படி நடந்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது” எனக்கூறுகிறார் மணி.

“அதிமுக ஆட்சிக்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் அதிகமாக இல்லை. ராஜேந்திர பாலாஜியின் சர்ச்சை பேச்சுகள், நிகழ்வுகள் தான் நடைபெற்றன. இவ்வளவு தொடர்ச்சியான சம்பவங்கள் இல்லை. திமுகவிலும் முந்தைய ஆட்சிக்காலத்தில் அப்படியில்லை” என்றார்.

**விரக்தியின் வெளிப்பாடா?**

மேலும் அவர் கூறுகையில், “இத்தகைய சம்பவங்கள் அதிகமாகியிருப்பது உண்மைதான். சமூக வலைதளங்களால் அதிகம் பரப்பப்படுகிறது என்பதும் உண்மைதான். இவை மிகவும் அவலமானது.

“தூக்கமற்ற இரவுகளைக் கழிக்கிறேன்” என முதலமைச்சர் கூறியும் ஏன் இவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பது புரியவில்லை. தேர்தல் சமயத்தில் இத்தகைய பேச்சுகளை பெரிதுபடுத்தத் தேவையில்லை. தேர்தல் அல்லாத காலத்தில் இப்படி பேசுவதுதான் சிக்கல். புதிய அமைச்சர்களைவிட மூத்த அமைச்சர்கள், மூத்த அரசியல்வாதிகள் இப்படி நடந்துகொள்வதுதான் புதிதாக இருக்கிறது. முகம் அறியாதவர்கள் இப்படி பேசுவது பிரச்னையில்லை.

இதன்மூலம் முதலமைச்சருக்குத்தான் அதீதமான பிரச்னைகளை இவர்கள் கொண்டுவருகின்றனர். கட்சியில் நிலவும் விரக்தியால் இவ்வாறு நடந்து கொள்கிறார்களா என்பது புரியவில்லை. கட்சிக்குள், ஆட்சியில் அவர்கள் விரும்பியவை நடக்கவில்லை என்ற விரக்தியால் இப்படி நடந்துகொள்ளலாம். அவர்களின் செயல்பாடுகளை சுற்றி இருப்பவர்களே முகம் சுழிக்கிறார்கள். அரசின் மீது அதிருப்தியில் இருப்பவர்களுக்கு இது கேலிபொருளாக மாறும். திமுக மூத்த அமைச்சர்கள் தங்களையும் கேலிபொருளாக மாற்றிக்கொள்கின்றனர். காலப்போக்கில் இவை வெறுப்பையே ஏற்படுத்தும். முதலமைச்சர் மீண்டும் தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டும். மரபார்ந்த எதிரிகளுக்கு வாய்ப்புகளை வழங்கிவிடக் கூடாது” என தெரிவித்தார் பத்திரிகையாளர் மணி.

# தனது முயற்சிகளுக்கு முன்னால் உள்ள சவால்களை எதிர்கொள்ள தயாராகும் ஜனாதிபதி



கலாநிதி ஜெகான் பெரேரா

பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்திருப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியின் அதிகாரத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுவில் நாட்டுக்கும் நினைவுபடுத்தியிருக்கிறார். பாராளுமன்ற கூட்டத்தொடரை திடீரென்று ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு வெளிப்படையான காரணம் எதுவுமில்லை. பொது நிதி, அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான முக்கியமான குழுக்கள் உட்பட 40 க்கும் அதிகமான பாராளுமன்ற குழுக்கள் செயலிழந்துவிட்டன.

பெப்ரவரி 4 இலங்கையின் 75 வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு பிறகு பெப்ரவரி 8 பாராளுமன்றம் மீண்டும் கூடும்போது 2048 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் வரை நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் பற்றி ஜனாதிபதி அறிவிப்பார் என்று அவரது அலுவலகம் அறிவித்திருக்கிறது. ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாத வறுமைப்பட்ட விவசாய சமுதாயமாக இருந்த சிங்கப்பூரை பிரதமர் லீ குவான் யூ 25 வருடங்களில் உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக மாற்றிக்காட்டினார். அதே போன்று இலங்கையையும் 25 வருடங்களில் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்கை ஜனாதிபதி கொண்டிருக்கிறார்.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க முனைப்புடன் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அண்மையில் முஸ்லிம் மதத் தலைவர்களின் மகாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் சமூகம் நவீனமயமாகவேண்டும் என்றும் அதே போன்றே மத நடைமுறைகளும் நவீனமயமாகவேண்டிய தேவை இருக்கிறது என்று உறுதிபட கருத்து தெரிவித்தார். பொருளாதாரத்தை மீட்டெடுத்து பிரச்சினைகளை தீர்த்துவைப்பது தொடர்பிலும் தனது நிலைப்பாடுகளை வலுவான முறையில் அழுத்திக் கூறினார்.

வரியிறுப்பாளர்களின் கொள்வனவு ஆற்றலை பல வீனப்படுத்தியிருக்கும் கடுமையான வரி அதிகரிப்புகளுக்கு பரந்தளவில் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. முதலில் வரியிறுப்பாளர்கள் பணவீக்கத்தின் தாக்கத்தை தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. வெளிநாட்டு கடன்களை மீளச்செலுத்தக்கூடிய நிலையில் இல்லையென்று கூறி அரசாங்கம் வங்குரோத்து நிலையைப் பிரகடனம் செய்தபோது பணவீக்கம் 80 சதவீதம் வரை உயர்ந்து காணப்பட்டது. தற்போது வரிகள் 36 சதவீதம் உயர்ந்ததை அடுத்து வரியிறுப்பாளர்கள் தங்களது மெய்யான வருமானம் பெருமளவுக்கு குறைந்துவிட்டதை காண்கிறார்கள்.

ஆனால் அரசாங்கம் நெகிழ்வுப்போக்கை காட்டுவதாக இல்லை. நிதியமைச்சை தனது பொறுப்பில் வைத்திருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க வரிகள் தொடர்பான விவகாரத்தில் பொதுமக்கள் மத்தியில் காணப்படும் உணர்வுகளுக்கு எதிராகவே செயற்படுகின்றார். அரசாங்க செலவினங்கள் மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்கு பெருமளவில் வரி விதிப்புக்களை தவிர்த்து மானியங்களை மக்களுக்கு வழங்கிய பல தசாப்த கால அரசாங்கங்களின் கொள்கைகளில் இருந்து விடுபடுவதற்கு நாட்டை நிர்ப்பந்திப்பதற்கு அவர் உறுதிபூண்டிருக்கிறார் போன்று தெரிகிறது.

இலங்கையில் வரி அறவீடுகள் மூலம் அரசாங்கம் பெறுகின்ற வருமானம் 8 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் அதேவேளை மற்றயை நாடுகளின் வரி வருமானம் 20 -- 25 சதவீதமாக காணப்படுகிறது. உள்நாட்டில் வரி அறவீடுகளின் மூலமாக வளங்களைப் பெருக்குவதை விடுத்து வெளிநட்டு கடன்கள் மூலமாக செலவினங்களை சமாளிப்பதன் விளைவாக நீண்டகாலமாக பொருளாதாரம் மந்த வளர்ச்சியில் இருந்துவருகிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னரும் கூட இதுவே நிலைமை.


## 13ஆவது திருத்தம்

உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கும் இன்னொரு விவகாரம் இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளாகும். இனத்துவ தேசியவாதத்துக்கு பணிந்துபோன அரசாங்கங்களினாலும் அரசியல் தலைவர்களினாலும் நீண்ட காலமாக இனநெருக்கடியை தீர்க்க முடியாமல் போய்விட்டது. இலங்கையின இன, மத பிளவுகளின் பின்னணியில் இனத்துவ தேசியவாதியாக காட்டிக்கொள்வது அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, வாக்குகளைப் பெற்று தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு நிச்சயமான ஒரு வசதியாக இருந்து வந்திருக்கிறது.

விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் காணப்பட்ட தீர்வுத்திட்டக்களை இதுகாலவரையில் இலங்கையில் எந்தவொரு தலைவரினாலும் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. இறுதியாக வந்த தீர்வுத்திட்டம் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தமாகும். அதற்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட 1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான தொடக்க முயற்சிகளைக்கூட முன்னெடுக்கமுடியாமல் போய்விட்டது.

இனநெருக்கடி மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் ஆராய்வதற்கு கூட்டிய சர்வகட்சி மகாநாட்டில் அந்த முயற்சிகளை எதிர்ப்பவர்களை மடக்குவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க துணிச்சலை வெளிப்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு தனக்கு இருக்கக்கூடிய நியாயப்பாட்டை சவாலுக்கு உட்படுத்துவதில் நாட்டம் காட்டிய இனத்துவ தேசாயவாத பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

“தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையால் எனது பொறுப்பாகும். சுமார் 37 வருடங்களாக 13 வது திருத்தம் அரசியலமைப்பின் அங்கமாக இருந்துவருகிறது. நான் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது யாராவது அரசியலமைப்புக்கான 22 வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் தனிநபர் சட்டமூலமாக கொண்டுவந்து அதை ஒழிக்கவேண்டும். அத்தகைய ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதுமில்லை, ஒழிக்கப்போவதுமில்லை என்று இரண்டும் இடைநடுவில் நாம் நிற்கமுடியாது” என்று அவர் கூறினார்.

1987 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட காலம் தொட்டு 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுதப்படாமல் இருந்து வருகிறது. ஜனாதிபதி விக்கிரமசிங்க அமைச்சராகவும் பிரதமராகவும் இருந்த அரசாங்கங்கள் உட்பட பல அரசாங்கங்கள் அந்த திருத்தத்தை கணிசமான அளவுக்கு குறிப்பாக காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாக அதிகாரப்பரவலாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு தவறிவிட்டன.

கூட்டத்தொடர் ஒத்திவைப்பிற்கு பிறகு பாராளுமன்றம் மீண்டும் பெப்ரவரி 8 கூடும்போது முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகள் குறித்து பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் உரையாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு வாய்ப்பு கிடைக்கும். தனது தற்துணிபின் அடிப்படையில் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைப்பதற்கு தனக்கிருக்கும் அதிகாரத்தை வெளிக்காட்டிய ஜனாதிபதி இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கான தனது நோக்கையும் தேசிய நல்லிணக்கத்துக்கு பின்பற்றவேண்டிய பாதை வரைபடத்தையும் முன்வைக்கக்கூடியதாக இருக்கும்.

## முரண்நகையான கடும் நடவடிக்கை

தற்றுணிபின் அடிப்படையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி பெப்ரவரி 20 பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற கூட்டத்தொடரை திடீரென்று ஒத்திவைத்ததன் மூலம் அதே போன்று திடீரென்று அதை கலைப்பதற்கான அதிகாரத்தையும் விரைவில் பெறப்போகும் செய்தியை ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டுக்கும் கூறியிருக்கிறார்.

தற்போதைய பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டு பெப்ரவரி 20 சரியாக இரண்டரை வருடங்கள் நிறைவடைகின்றது. இரண்டரை வருடங்களுக்கு பிறகு பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை அரசியலமைப்புக்கான 20 வது திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்குகிறது. ஆளும் கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் சென்று வாக்கு கேட்டு பிரசாரம் செய்யக்கூடிய நிலையில் இல்லை. இத்தகைய இடர்மிகு சூழ்நிலையில் அவர்கள் ஜனாதிபதிக்கு சவால் விடுக்கவோ அல்லது 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அவரின் உறுதிப்பாட்டை எதிர்க்கவோ விரும்பமாட்டார்கள்.

மறுபுறத்தில், ஜனாதிபதி பாராளுமன்றத்தை வழிக்கு கொண்டுவந்தாலும் கூட அதனால், இனநெருக்கடியில் விட்டுக்கொடுப்பைச் செய்து நிலைபேறான அரசியல் தீர்வொன்று காணப்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றியை உறுதிசெய்யமுடியும் என்று கூறுவதற்கில்லை. இனநெருக்கடி வேறுபட்ட இன, மத சமூகங்கள் மத்தியில் புராதன உணர்வுகளைத் தூண்டுகிறது. அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் பல தசாப்தகால இனநெருக்கடிக்கும் போருக்கும் வழிவகுத்த வில்லன்களாக நோக்கப்படுகிறார்கள்.

ஆனால் நாட்டில் உள்ள நெருக்கடி அரசியல் கட்சிகளுக்கும் முந்தியதாகும். இலங்கையின் சமூகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் 1928 ஆம் ஆண்டு சுயாட்சிக்கு நாடு தயாராக இருக்கிறதா என்பதை உறுதிசெய்துகொள்ள ஆணைக்குழுவொன்றை அனுப்பினார்கள். அதன் மதிப்பீடு எதிர்மறையானதாக இருந்தது. பெரிய சமூகத்தின் பிரதிநிதிகள் தங்களது நலன் தேசிய நலன் என்ற நிலைப்பாட்டை கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும் தங்களுக்குள் முரண்பாடுகளைக் கொண்ட சிறிய சமூகங்கள் சகலதினதும் பிரதிநிதிகள் பெரிய சமூகத்துக்கு எதிராக ஐக்கியப்பட்டவர்களாக இருந்தார்கள் என்று டொனமூர் ஆணைக்குழு அதன் அறிக்கையில் எழுதியது.

அதனால், காலங்காலமாக நீடித்துவந்த பிரிவினை உணர்வுகளுக்கு இரையாகாமல் இருப்பது சிவில் சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும். இனநெருக்கடிக்கான தீர்வு மற்றும் 13 வது திருத்தம் சாத்தியமாக்குகின்ற வகையிலான இனங்களுக்கிடையிலான அதிகாரப்பரவலாக்கலின் அவசியம் குறித்து மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு சிவில் சமூகத்தில் அறிவார்ந்த தலைவர்கள் பற்றுறுதியுடன் பாடுபடவேண்டும். இதற்கான அறிகுறிகளை அறகலய போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது காணக்கூடியதாக இருந்தது.

அந்த போராட்டத்துக்கு தலைமை தாங்கிய இளைஞர் யுவதிகள் இனம், மதம், சாதி அடிப்படையில் எந்தவிதமான பாரபட்சமும் இன்றி சகலரும் சமத்துவமான குடிமக்களாக இருக்கவேண்டும் என்று பகிரங்கமாக முழக்கத்தை எழுப்பினார்கள். குறுகிய தேர்தல் நோக்கங்களுக்காக இனத்துவ தேசியவாத அரசியல்வாதிகள் மேற்கொள்கின்ற சூழ்ச்சித்தனமான நடவடிக்கைகளுக்கு இரையாகாமல் இருப்பதற்கு அந்த இளைஞர்களும் யுவதிகளும் உறுதி பூண்டார்கள். அறிவுபூர்வமாக சிந்திக்கும் அந்த இளம் தலைவர்களுடன் ஆக்கபூர்வமான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி பொதுமன்னிப்பொன்றை வழங்கி பிரச்சினைகளுக்கான தீர்வின் பங்காளிகளாக மாற்றுவதற்கு பதிலாக அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கொடுமையான நடவடிக்கைகளை எடுப்பது ஒரு முரண்நகையாகும்.

# சாவகச்சேரியில் பேருந்துகள் விபத்து!

யாழ்ப்பாணம், பெப். 01

சாவகச்சேரி நுணாவில் ஏ9 வீதியில் இ. போ. ச. பேருந்தும் - தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்த இ. போ. ச. பேருந்து முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகின.

தெய்வாதீனமாக இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஐ)

# ஜனாதிபதிக்கு எதிர்ப்பு மேலும் பலருக்கு வழக்கு

யாழ்ப்பாணம், பெப். 01

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் போது யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமி உட்பட மேலும் சிலருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்காக வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. தவராசா முன்னிலையாகியிருந்தார்.

கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த போது போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் மீதான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது, வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான். போராட்டத்தில் ஈடுபட்டு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன் சோமபாலன், வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்க செயலாளர் ஜெனிற்றா ஆகியோரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

அத்துடன், மன்றில் முன்னிலையான இருவரையும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன் உள்ளிட்ட பலரின் பெயர்கள் நீதிமன்றில் பொலிஸாரால் பிரேரிக்கப்பட்டது. (ஐ)

# ஊழல் பட்டியல்: இலங்கைக்கு 101ஆவது இடம்!

நியூயோர்க், பெப். 01

அதிக ஊழல்மிக்க நாடுகளில் இலங்கை 101ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓர் இடம் பின்தங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டு ஊழல் புலனாய்வு சுட்டெண் (CPI) தரவுகளை மேற்கோள்காட்டி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷன் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஊழல் புலனாய்வு சுட்டெண்ணுக்கமைய, 180 நாடுகளில் 36 புள்ளிகளுடன் இலங்கை 101ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

புள்ளிவிபரவியல் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊழல் புலனாய்வு சுட்டெண் தரப்படுத்தலுக்கு 0 முதல் 100 வரையிலான புள்ளி அளவைப் பயன்படுத்துகிறது.

அதற்கமைய, 100 புள்ளி ஊழல் அற்ற நாடாகவும், 0 புள்ளி மிகவும் ஊழல் நிறைந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த பட்டியலில் 90 புள்ளிகளுடன் டென்மார்க் முதல் இடத்தில் உள்ளது. இதேவேளை, 12 புள்ளிகளுடன் சோமாலியா இறுதி (180 ஆவது) இடத்தில் உள்ளது.

(ஐ)

# இலங்கைக்கு இன்று வருகிறார் நூலண்ட்



நியூயோர்க், பெப். 01

அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலர் விக்ரோறியா நூலண்ட் இரு நாள் பயணமாக இன்று புதன்கிழமை இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் அவர் அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்தும் கவனம் செலுத்துவார் என்று தெரியவருகிறது.

# விழித்தெழு வீதி நாடகம்!

யாழ்ப்பாணம், பெப். 01

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கூத்தாட்டு அவை குழாத்தின் 'விழித்தெழு' என்னும் பெயரில் அமைந்த வீதி நாடகம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் புல்லுக்குளப் பகுதியில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த நாடக ஆற்றுகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

10 கலைஞர்கள் பங்கு கொள்ளும் இந்நாடக ஆற்றுகையானது போதைப் பொருள்களிலிருந்து எவ்வாறு மாணவர்கள் மற்றும் இளைய சமூகம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை மையப் பொருளாகக் கொண்டு யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் நாடகவியலாளர் விஜயரூபனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# "ஆணைக்குழுவை மாற்றினாலும் தேர்தலைப் பிற்போட முடியாது!"

அரசமைப்பு பேரவையால் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டாலும் தேர்தலை பிற்போட முடியாது. அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் அரசலமைப்பில் எமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் ஸ்திரமாகவுள்ளதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார். தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று செவ்வாய்கிழமை ஊடக பிரதானிகளுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**கல்வி tv CHANNEL-1**

**01.10.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**01.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சுதந்திரதின ஏற்பாடுகள் மட்டக்களப்பில் பூர்த்தி!



மட்டக்களப்பு, பெப். 01

பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறவுள்ள 75 ஆவது தேசிய சுதந்திர தின விழா தொடர்பான முன்னேற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக அநாவசிய செலவுகளைக் குறைக்கும் வண்ணம் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வில் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதை தொடர்ந்து பிரதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு 75,000 மரக்கன்றுகள் நடும் நோக்கில் 45,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக மர நடுகை இடம்பெற்றுவரும் நிலையில் அதிதி களினால் கோட்டை பூங்கா வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

முப்படையினரின் ஒத்துழைப்பு மற்றும் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய குழு, சாரணர்கள் மற்றும் கடேற் அணியினரின் அணிவகுப்பு மரியாதையுடன் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்தோடு இன்றும் நாளையும் கல்லடி கடற்கரை, கோட்டை பூங்கா வீதி, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை அண்டிய வாவியோரங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்காக முப்படையினர், மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## கல்முனை வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

அம்பாறை, பெப். 01

தேசிய ரீதியில் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி திறன் விருது இரண்டாம் இடம் பெற்றமையை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர்.இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஜே. மதன், வைத்தியசாலை கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, தாதிய பரிபாலகர்கள் திருமதி சுஜேந்திரன், திரு சசிதரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)



## 2 சிறுநீரகங்கள் செயலிழந்த தாய்க்கு ரோட்டரி நிதி உதவி!

அம்பாறை, பெப். 01

இரண்டு சிறுநீரகங்களும் இழந்த தாய்க்கு மாதாந்த கொடுப்பனவை மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் வழங்கி வருகிறது.

ரோட்டரி கழக தலைவர் ரோட்டேரியன் பு.ரமணன் அந்த நிதி உதவியை நேற்று முன்தினம் வழங்கினார்.

இதேவேளை, மண்டூர் தம்பலவத்தை பகுதியில் இரண்டு கால்களையும் இழந்த ஒருவருக்கு சக்கர நாற்காலியையும் வழங்கி வைத்தார்.

அச்சமயம் ரோட்டரி கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (அ)

## மட்டக்களப்பு சிசிலியா மாணவிகள் சாதனை



மட்டக்களப்பு, பெப். 01

வெளியாகியுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய பாடசாலை மாணவிகளுக்கான

பாராட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய பாடசாலையில் 2022 ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 116 மாணவர்களில், 115 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி அடைந்துள்ளதுடன்

48 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அருட் சகோதரி நிதாஞ்சலி தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் அருட் சகோதரி நிதாஞ்சலி தலைமையில், ஆசிரியர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் மட்டக்களப்பு வலயக் கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஹரணியா சுதாகரன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (அ)

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் அறிமுகம் மட்டக்களப்பில்




மட்டக்களப்பு, பெப். 01

உள்ளூராட்சிமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு, போரதீவுப் பற்று பிரதேச சபைக்காக போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை

அறிமுகம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்ணம், போரதீவுப் பற்று பிரதேச சபை தவிசாளர் யோ. ரஜனி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சி உறுப்பினர்கள் வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். (அ)

## மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம்



மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு ஆசிரியர் ஆலோசர்களாக உள்ளீர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனக சூரியம் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கினார்.

ஆசிரியர் ஆலோசர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

## மட்டக்களப்பில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் உள்ள நீர்நிலை பகுதியில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி தனது வீட்டில் இருந்து வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் காணாமல்போனமை தொடர்பில் காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றின் உரிமையாளர் அந்த பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதை கண்டு தெரியப்படுத்தியதையடுத்து சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

கிரான்குளம், ஆலயடி வீதியை சேர்ந்த 72 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயாரான கந்தப்பெண் பிள்ளையம்மா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதவானின் உத்தரவுக்கு அமைவாக சம்பவ இடத்துக்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூறு பரிசோதனைக்கு பிறகு சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தர விட்டார். (அ)

# பெண்கள் மீதான தலிபான்களின் தடைக்கு ஐ.நா. கடும் கண்டனம்

நியூயோர்க், பெப். 01

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு தலிபான்கள் விதித்துள்ள தடைகளை வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பிரிவுத் தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ் இந்த கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதல் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்லூரி செல்லக்கூடாது, பணிக்கு செல்லக்கூடாது, வாகனங்கள் ஓட்டக்கூடாது என்பது உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்தனர்.

அத்துடன் கடந்த ஒரு ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பிரிவுத் தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ், தலிபான்கள் இந்த கட்டளைக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இல்லையெனில் அது பேரழிவை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# உக்ரைனுக்கு போர் விமானங்கள் வழங்க எந்தத் தடையும் இல்லை!

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் அறிவிப்பு

பாரிஸ், பெப். 01

உக்ரைனுக்குப் போர் விமானங்களை வழங்குவதற்குக் "கொள்கையளவில் எந்தத் தடைகளும் கிடையாது" - என்று பிரான்ஸ் அதிபர் மக்ரோன் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக மேலும் ஆயுத தளபாட உதவுகளை வழங்குமாறு உக்ரைன் அரசு கோரியுள்ளது. குறிப்பாக நீண்ட தூர ஏவுகணைகளையும் போர் விமானங்களையும் விரைவாகத் தந்துதவுமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பிரான்ஸ் தனது போர் விமானங்களை வழங்குமா என்று அதிபர் மக்ரோனிடம் ஹேக் நகரில் வைத்துச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த அவர், விமானங்களை வழங்குவதற்கு கொள்கையளவில் எந்த வித தடைகளும் கிடையாது என்று தெரிவித்தார். ஆனால் அதன் மூலம் "போரை விரிவாக்கக் கூடாது" என்பது தனது கருத்து என்றும் போர் விமானங்களை வழங்குவது பிரான்ஸின் பாதுகாப்புப் படைகளைப் "பலவீனப்படுத்தாது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேசமயம், ஜேர்மனி அதன் போர் விமானங்களை ஒருபோதும் உக்ரைனுக்கு வழங்க மாட்டாது என்று சான்சிலர் ஒலாப் சோல்ஸ் உறுதிபடத் தெரிவித்துள்ளார். அதிநவீன ஆயுதங்களுக்கான இந்த "பந்தயப் போரில்" மேற்கு நாடுகள் இணையக் கூடாது என்றும் சோல்ஸ் கடுமையாக எச்சரித்துள்ளார். நேட்டோ மற்றும் ஐரோப்பியக் கூட்டணி நாடுகளது அழுத்தம் காரணமாக ஜேர்மனி உக்ரைனுக்குத் தனது "லியோபாட்-2" என்ற அதி வலுக் கொண்ட போர் டாங்கிகளை வழங்குவதற்கு கடந்த வாரம் இணக்கம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் தீவிர சண்டைகள்



மூண்டுள்ளன. வாக்னர் என்ற பிரபல தனியார் கூலிப் படைகளது உதவியுடன் ரஷ்யப் படைகள் அங்கு முன்னேறி வருகின்றன. இந்த நிலையில் உக்ரைன் அதிபர் தினமும் ஆயுத உதவி கோரி அவசர குரல் எழுப்பி வருகிறார்.

அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து உட்பட மேற்குலக நாடுகள் சில உக்ரைனுக்குத் தங்களது கனரகப் போர் டாங்கிகளை வழங்கப்போவதாக அறிவித்துள்ளன. நூற்றுக் கணக்கான டாங்கிகள் விரைவில் உக்ரைனுக்கு அணிவகுத்துச் செல்லவுள்ளன.

இவ்வாறு டாங்கிகளை வழங்குவதை போரில் மேற்கு நாடுகளின் "ஒரு நேரடியான தலையீடாகவே" மொஸ்கோ கருதுகின்றது என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் ஆலோசகர் ஒருவர் எச்சரித்திருக்கிறார். (அ)



# சுவீடன் இல்லாமலேயே நேட்டோவில் பின்லாந்து

அங்காரா, பெப். 01

சுவீடன் இல்லாமலே பின்லாந்து மட்டும் தனியாக நேட்டோவில் இணைவதற்கு அனுமதிக்கலாம் என்று துருக்கி வெளியுறவுத் துறை அமைச்சர் மெவ்லுட் காவுசோகுலு தெரிவித்தார். பின்லாந்தின் நேட்டோ விண்ணப்பத்தில் அதிக பிரச்னை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடர்ந்து, அதுவரை அணிசேரா நிலையைக் கடைபிடித்து வந்த அண்டை நாடுகளான பின்லாந்தும், சுவீடனும் தங்களது பாதுகாப்புக்காக நேட்டோவில் இணைய விண்ணப்பித்தன.

எனினும், தங்கள் நாட்டின் குர்து இன பிரிவினைவாதிகளை சுவீடன் ஆதரிப்பதால் அந்த நாடு நேட்டோவில் இணைய அனுமதிக்கமாட்டோம் என்று துருக்கி கூறி வருகிறது. இந்தச் சூழலில் பின்லாந்து மட்டும் நேட்டோவில் இணையலாம் என்று அந்த நாடு தற்போது கூறியுள்ளது. (அ)



## அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

# ஒரே நாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து!

நியூயோர்க், பெப். 01

கடுமையான பனிப்புயல் காரணமாக அமெரிக்காவில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை நிலவரப்படி, 1,019 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான கண்காணிப்பு வலைத்தளமான பிளைட் எவார் தெரிவித்துள்ளது.

பனிப்புயலால், சவுத்வெஸ்ட் எயார்லைன்ஸ், அமெரிக்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட விமான நிறுவனங்கள் 1000இற்கும் மேற்பட்ட விமானங்களை இரத்து செய்திருக்கின்றன.

விமான சேவைகளில் ஏற்பட்ட பாதிப்பால், விமான நிலையங்களில் (ஆயிரக்கணக்கான) பயணிகள் பல மணி நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (அ)


# பாகிஸ்தானின் பெஷாவர் மசூதி குண்டுவெடிப்பில் 61 பேர் மரணம்!

இஸ்லாமாபாத், பெப். 01

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 61 பேர் உயிரிழந்தனர். 157 பேர் காயம் அடைந்தனர். இதில் பெரும்பாலும் பொலிஸாரே கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானின் தலிபான் பிரிவான தெஹ்ரீக்-இ-தலிபான் பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் பாதுகாப்பு மிகுந்த பொலிஸ் லைன் பகுதி உள்ளது. இங்குள்ள மசூதியில் நேற்று முன் தினம் மதியம் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில் மசூதி கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதனால், அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. காவல் துறையினரும், மீட்பு படையினரும் விரைந்து வந்து, மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.



இடிபாடுகளில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டன. குண்டுவெடிப்பில் காயம் அடைந்தவர்கள், இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குண்டுவெடிப்பில் 61 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. 150 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றனர். பெஷாவர் நகரின் லேடி ரீடிங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 23 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் கூறினர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த மசூதி, நகரின் பொலிஸ் தலைமையகம் அமைந்துள்ள வளாகத்தில் உள்ளது. தொழுகையில் காவல் துறையினர் அதிகம் பங்கேற்றுள்ளனர். இதனால், உயிரிழந்தவர்களில் பலரும் பொலிஸார் என்று கூறப்படுகிறது.

தொழுகையின்போது, முதல் வரிசையில் இருந்த ஒருவர் தனது உடலில் பொருத்தியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது. (அ)

# இந்திய அணியை வீழ்த்தி சாதிக்குமா நியூசிலாந்து?

அகமதாபாத், பெப். 01

கடந்த 10 வருடங்களாக இந்தியாவில் 55 தொடர்கள் நடைபெற்றுள்ளன. டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 என அனைத்திலும் இரு நாடுகளுக்கு எதிராக மட்டுமே தோல்வியடைந்துள்ளது இந்திய அணி.

2015இல் ஒருநாள், இருபது - 20 என இரு தொடர்களிலும் இந்தியாவைத் தோற்கடித்தது தென்னாபிரிக்கா. அப்போது இந்திய அணியின் தலைவர் டோனி. இதன் பிறகு 2019இல் இந்தியாவுக்கு வந்த அவுஸ்திரேலிய அணி இருபது - 20, ஒருநாள் தொடர்களை வென்று அசத்தியது. அப்போது இந்திய அணியின் தலைவர் கோலி.

2019 மார்ச்சுக்குப் பிறகு இந்திய அணி சொந்த மண்ணில் விளையாடிய ஒரு தொடரிலும் தோற்கவில்லை.

நியூசிலாந்துக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.




தற்போது இருபது - 20 தொடர் 1-1 என சமனில் உள்ளது. முதல் இருபது -20ஐ வென்ற நியூசிலாந்து அணி, அடுத்த ஆட்டத்தில் தோல்வியடைந்தது. 3ஆவது இருபது - 20 போட்டி அகமதாபாத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தியாவில் இதுவரை விளையாடிய தொடர்களில் ஒருமுறை மட்டும் ஓர் ஆட்டம் கொண்ட இருபது - 20 தொடரை வென்றது நியூசிலாந்து. மற்றும்படி இந்தியா வில் அந்த அணி மற்றொரு தொடரை வென்றதில்லை.

இந்தத் தொடரில் கிடைக்கும் அனுபவம் ஒரு நாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு உதவும் என்கிறார் நியூசிலாந்து அணியின் தலைவர் சாண்ட்னர். ஆனால், இருபது - 20 தொடரை வென்று சாதனை படைக்க வேண்டும் என நியூசிலாந்து ரசிகர்கள் விரும்புகிறார்கள்.




## பயிற்சி ஆட்டம் இல்லாதது நல்லது

சிட்னி, பெப். 01


இந்தியாவில் விளையாடும் டெஸ்ட் தொடருக்கு முன்பு பயிற்சி போட்டிகளில் விளையாடாமல் இருப்பது குறித்து தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார் பிரபல துடுப்பாட்ட வீரர் ஸ்ரீவ் ஸ்மித்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர், பெப்ரவரி 9 முதல் தொடங்குகிறது. எந்தவொரு பயிற்சி ஆட்டத்திலும் விளையாடாமல் முதல் டெஸ்டில் களமிறங்குகிறது ஆஸி. அணி. இதுகுறித்து விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இந்நிலையில், பயிற்சி போட்டிகளில் விளையாடாதது பற்றி ஒரு பேட்டியில் ஸ்ரீவ் ஸ்மித் கூறியதாவது:

நாங்கள் மைதானத்தில் விளையாடும் வரை பொறுத்திருந்து பார்க்கவும். இந்தியாவில் பயிற்சி ஆட்டங்களில் விளையாடுவதில்லை என்ற முடிவு சரியானது என நினைக்கிறேன். கடந்தமுறை வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தை எங்களுக்குத் தந்தார்கள். சுழல்பந்து வீச்சை நாங்கள் அவ்வளவாக எதிர்கொள்ளவில்லை. எனவே, பயிற்சி ஆட்டங்கள் எங்களுக்குத் தேவைப்படாது. அதற்குப் பதிலாக எங்களுடைய வலைப்பயிற்சியில் சுழல்பந்து வீச்சாளர்களைக் கொண்டு பயிற்சிகள் எடுத்துக் கொள்கிறோம் - என்றார்.

## இந்தியாவுடனான டெஸ்ட் ஸ்டார்க் பங்கேற்க மாட்டார்




சிட்னி, பெப். 01

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் விளையாட முடியாத சூழலை வெளிப்படுத்தியுள்ளார் பிரபல ஆஸி. வேகப்பந்து வீச்சாளர் மிற்செல் ஸ்டார்க்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டி களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர், பெப்ரவரி 9 முதல் தொடங்குகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான பொக்ஸிங் டே டெஸ்டில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டார்க்கின் இடக்கை விரலில் காயம் ஏற்பட்டது. இதனால் அத் தொடரின் கடைசி ஆட்டத்தில் அவர் பங்கேற்க வில்லை.

இந்நிலையில், இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்டில் ஸ்டார்க் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கிரிக்கெட் அவுஸ்திரேலியா விருதுகள் வழங்கும் விழாவில் பேசிய ஸ்டார்க், நான் குணமாகிக் கொண்டு வருகிறேன். இன்னும் சில வாரங்கள் தேவைப்படுகின்றன. முதல் டெஸ்டில் நாங்கள் வெல்வோம் என எண்ணுகிறோம். அணி வீரர்களை (2-வது டெஸ்ட் நடைபெறும்) டில்லியில் சந்திக்கிறேன் - என்றார்.

## ரென்னிஸ் தரவரிசையில் சபலெங்கா முன்னேற்றம்!

லண்டன், பெப். 01

ரென்னிஸ் தரவரிசையில் ஆஸி ஓப்பனை வென்ற அரினா சபலெங்கா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். எனினும், இகா ஸ்வியாடெக் முதலிடத்தில் தொடர்கிறார்.

சர்வதேச ரென்னிஸ் சங்கம் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், பெண்கள் தரவரிசையில் போலந்தின் இகா ஸ்வியாடெக் தொடர்ந்து 44ஆவது வாரமாக முதலிடத்தில் தொடருகிறார். அவுஸ்திரேலிய ஓப்பனை வென்று தனது கிராண்ட்ஸ்லாம் கனவை நனவாக்கிய பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா மூன்றிடங்கள் முன்னேறி 2ஆவது இடத்தை எட்டியுள்ளார்.

இதன் இறுதி ஆட்டத்தில் தோல்வி கண்ட கஜகஸ்தானின் எலினா ரைபகினா 15 இடங்கள் எகிறி முதல்முறையாக முதல்-10 இடத்துக்குள் நுழைந்து 10ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

துனீசியாவின் ஒன்ஸ் ஜபீர் 2இல் இருந்து 3ஆவது இடத்துக்கு இறங்கினார். இரட்டையர் தரவரிசையில் செக்குடியரசின் கேத்ரினா சினியகோவா முதலிடத்தில் நீடிக்கிறார்.





## ரென்னிஸ் தரவரிசை ஜோகோவிச் முதலிடம்!

லண்டன், பெப். 01

ரென்னிஸ் தரவரிசையில் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்துள்ளார். இன்னும் மூன்று வாரங்கள் அவர் முதலிடத்தில் நீடிக்கும் பட்சத்தில் புதிய சாதனை படைப்பார்.

சர்வதேச ரென்னிஸ் சங்கம் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில், அவுஸ்திரேலிய ஓப்பனை 10ஆவது முறையாக கைப்பற்றி பிரமிக்க வைத்த நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 4 இடங்கள் முன்னேறி மொத்தம் 7,070 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஏற்கனவே 374 வாரங்கள் முதலிடத்தில் இருந்துள்ள ஜோகோவிச் மறுபடியும் முதலிடததைப் பிடித்துள்ளார். ஒட்டுமொத்த ரென்னிசில் ஜேர்மனி முன்னாள் வீராங்கனை ஸ்டெபி கிராப் 377 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே அதிகபட்சமாகும்.

பெப்ரவரி 27ஆம் திகதி வரை 35 வயதான ஜோகோவிச் முதலிடத்தில் இருக்கும் பட்சத்தில் ஸ்டெபி கிராப்பின் சாதனையை தகர்த்து புதிய வரலாறு படைப்பார்.

இதுவரை முதலிடத்தில் இருந்த ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் 2ஆவது இடத்துக்கு (6,730 புள்ளி) தள்ளப்பட்டார். மற்றொரு ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 2இல் இருந்து 6ஆவது இடத்துக்கு சறுக்கினார்.

அவுஸ்திரேலிய ஓப்பனில் ஜோகோவிச்சிடம் தோல்வி அடைந்த கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் ஒரிடம் முன்னேறி 3ஆவது இடத்தை பெற்றுள்ளார். (ஐ)

## பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகம்! வழவமைப்பாளர் பதவி நீக்கம்!

லக்னௌ, பெப். 01

பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளம் காரணமாக லக்னௌ ஆடுகள வடிவமைப்பாளரைப் பதவியிலிருந்து நீக்கியுள்ளது உத்தரப் பிரதேச கிரிக்கெட் சங்கம்

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது இருபது - 20ஐ 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது பாண்ட்யா தலைமையிலான இந்திய அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்கள் எடுத்தது. பிறகு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 19.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சுழல்பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளம் அதிர்ச்சியளிக்கிறது - என்றார் பாண்ட்யா. அந்த ஆட்டத்தில் வீசப்பட்ட 40 ஓவர்களில் 30 ஓவர்களைச் சுழல்பந்து வீச்சாளர்கள்தான் வீசினார்கள். மேலும் எந்த ஒரு துடுப்பாட்ட வீரராலும் ஒரு சிக்ஸரும் அடிக்க முடியவில்லை.

இந்நிலையில் இருபது - 20 கிரிக்கெட்டுக்கு உகந்தவாறு ஆடுகளம் வடிவமைக்காத காரணத்துக்காக லக்னௌ மைதானத்தின் ஆடுகள வடிவமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளன. அவருக்குப் பதிலாக மூத்த ஆடுகள வடிவமைப்பாளரான சஞ்சீவ் குமார் அகர்வால் தேர்வாகியுள்ளார்.

# ‘13’ஐ நடைமுறைப்படுத்த முன் மாகாண தேர்தலை நடத்துங்கள்!

## பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, பெப். 01

**அர்த்தமற்ற அறிவிப்புக்களை வெளியிடுவதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**



13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிவிப்பு குறித்து அவர் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

அனைத்து மாகாண சபைகளும் செயலிழந்துள்ள பின்னணியில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகவும் அவர் சாடினார்.

இவ்வாறு அர்த்தமற்ற அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு அவர் அரசாங்கத்துக்கு சவால் விடுத்தார்.

அதிகரித்துவரும் நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் கவனத்தை திசை திருப்ப அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிதிப் பற்றாக்குறை எனக் கூறி உள்ளூராட்சித் தேர்தலைத் தள்ளிப்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் அவர் கண்டனம் தெரிவித்தார். (அ)

# மாமுனை கடலில் காணாமல்போன 15 வயதுச் சிறுவன் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 01

மருதங்கேணி மாமுனை பிரதேசத்தில் கடலில் நீராடிய போது காணமால்போன சிறுவன், நேற்று செவ்வாய்க்கிழமை காலை செம்பியன்பற்று கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் உடல் கூற்று பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த நந்தகுமார் திருமுருகன் (வயது 15) எனும் சிறுவனே சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நண்பர்களுடன் கடலில் நீராடச் சென்றவேளை சிறுவன் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். இவருடன் சென்ற மற்றுமொரு சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில், மீட்கப்பட்டு, பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காணாமல்போன சிறுவனை பொலிஸார், கடற்படையினர், மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தேடி வந்த நிலையில், அவர் சடலமாக செம்பியன்பற்று கடற்கரையில் சடலமாக கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டார். (அ)



# மன்னாரில் இராணுவத்தினரால் நிறுத்தப்பட்ட சிறு கடற்றொழில்

மன்னார், பெப். 01

மன்னார்-யாழ் பிரதான வீதி, தள்ளாடி 14 கண் பாலத்தடியில் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலங்களாக சிறு கடல் தொழில் செய்யும் மீனவர்களை இராணுவம் தொழில் செய்ய அனுமதிக்காததன் காரணமாக அப்பகுதி மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் இந்த விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதனின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நேரடியாகச் சென்று மீனவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் வன்னி இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இப் பிரச்னை தொடர்பாக தெரியப்படுத்தினார்.

உடனடியாக தள்ளாடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி சம்பவ இடத்திற்கு வருகை தந்து பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் அந்த மீனவர்கள் தொடர்ந்தும் அப் பகுதியில் சிறு கடல்தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் பாலத்தடியில் நாகதாழ்வு, பெரிய நாவற்குளம், மாந்தை மற்றும் திருக்கேதீஸ்வரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சிறு கடற்றொழில் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அனைத்து அரச நிறுவனங்களிலும் ஊழியரின் எண்ணிக்கை குறைப்பு

கொழும்பு, பெப். 01

அனைத்து அரச நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்களில் அனைத்து அரச நிறுவனங்களிலும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் கூறினார். (அ)

# தேர்தல் சட்ட மீறல்களுக்கு பின்னால் ஆளும் தரப்பினர்

கொழும்பு, பெப். 01

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் காலத்தில் இதுவரை பதிவாகியுள்ள தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகளில் பெரும்பான்மையானவை ஆளும் கட்சியைச் சேர்ந்தவை என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரக் காலத்தில், குறிப்பாக ஆளும் கட்சியியான பொதுஜன பெரமுனவினால் அரச சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 15 வழக்குகளை தமது அமைப்பு பதிவு செய்துள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பானவை என பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது. (அ)

# ஜனவரியில் வரி வருமானம் 158 பில்லியன் ரூபா மட்டுமே!

## செலவு 367 பில்லியன் ரூபா அமைச்சர் பந்துல தகவல்

கொழும்பு, பெப். 01

ஜனவரி மாதத்தில் 158.7 பில்லியன் ரூபாய்களையே அரசாங்கம் வரிகளாக பெற்றுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகள் உட்பட அரச செலவீனம் 367.8 பில்லியன்கள் ரூபா என அவர் குறிப்பிட்டார்.

குறித்த செலவீனமானது ஜனவரி 27 ஆம் திகதி வரையானது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# தனியார் வைத்தியசாலையொன்றில் சிறுநீரக மோசடி குறித்து ஒருவர் கைது

கொழும்பு, பெப். 01

பொரளையில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிறுநீரக அறுவைச் சிகிச்சை தொடர்பில் மேலும் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதற்கமைய ஐவர் பொரளை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவர் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களை ஏமாற்றிப் பணம் தருவதாகக் கூறி சிறுநீரகத்தை பெற்றுக்கொண்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்தோடு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரிடம் இருந்து 02 கையடக்க தொலைபேசிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உதவவேண்டும்

## கனடாவிடம் தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை

மொன்றியல், பெப். 01

இலங்கை அதிகாரிகள் மீது கனடாவின் பொருளாதாரத் தடைகளை பாராட்டியுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நியூரம்பெர்க் போன்ற புதிய நீதிமன்றத்தின் மூலம் வழக்குத் தொடரவும் உலகத் தமிழ் அமைப்புகளின் சம்மேளனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் வேல் வேலாயுதபிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு உயர் மட்ட அதிகாரிகள் மீது கனடா இந்த மாதத் தொடக்கத்தில் தடைகளை அறிவித்திருந்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கையை கனடா நிறுத்த வேண்டும் என சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலியிடம் தமது தரப்பு இந்தக் கோரிக்கையை விடுத்ததாக வேலாயுதபிள்ளை கூறினார்.

இலங்கையின் மூத்த அதிகாரிகளுக்கு அமெரிக்கா முன்னர் அனுமதி அளித்துள்ளது. ஆனால் ராஜபக்ஷ சகோதரர்களை தடை பட்டியலிட்ட ஒரே நாடு கனடா என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மனித உரிமை...

தியுள்ளது.

போராட்டத்தை ஒடுக்குவதன் மூலம் நாட்டில் தந்திரோபாய ரீதியாக அடக்குமுறை கையாளப்படுகிறது. அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவதாகவும் போராட்டங்களை தடுப்பதற்கு இராணுவத்தை பயன்படுத்துவதாகவும் ஜனாதிபதி சமீபத்தில் தெரிவித்த கருத்து மிகவும் பாரதூரமானது என மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் ஆதிலுர் ரஹ்மான் கானின் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போராட்டக்காரர்களின் உரிமைகளை தற்போதைய அரசாங்கம் எந்தளவுக்கு பாதுகாக்கிறது என்பது குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும். பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்துக்கு அருகில் கடந்த ஜூலை 9 ஆம் திகதி , 8 ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை குறித்தும் அந்த அறிக்கையில் கடுமையாக சாடப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ச்சியான போராட்டங்களை ஒடுக்குவதற்காக துப்பாக்கி குண்டுகள், கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகத்தை பயன்படுத்துவது, பொது மக்களின் ஒன்றுகூடலை அநாவசியமாக கட்டுப்படுத்துவது அவசரகால சட்டத்தை பயன்படுத்தி சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வது , சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது உள்ளிட்டவை பாரதூரமான விடயம் எனவும் சர்வதேச மனித உரிமைகள் சம்மேளனம் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பிலான இடைக் கால மீளாய்வு அறிக்கை இன்று புதன்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதித்...

பிரேமதாஸ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவார் என்றும் கூறினார்.

2024 ஆம் ஆண்டு தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று 2030 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக நீடிப்பார் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அத்தோடு ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் ஆதரவளிப்பார்கள் என அவர் கூறினார்.

2019 இல் பதவியேற்ற ஜனாதிபதியின் நான்கு வருட பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2024 இல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுதந்திர...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய சுதந்திர தினவிழா கொண்டாடப்படவுள்ளது.

இந்த சுதந்திர தின விழாவை பல கட்சிகளும் புறக்கணிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இலங்கை தமிழரசு கட்சி இந்த விழாவை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறுகையில், "1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. கொண்டாட்டங்களை புறக்கணிக்கிறது" - என்றார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறும் தேசிய விழாவில் கட்சி கலந்து கொள்ளாது என ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் காங்கிரஸும் கட்சி கொண்டாட்டங்களை புறக்கணிக்கப் போவதாகக் கூறியுள்ளன. (ஐ)

## அரச...

களின் எண்ணிக்கையை குறைக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது. திறைசேரியின் ஆலோசனைக்கு அமைய அமைச்சுகளின் செயலாளர்கள் ஒவ்வொரு அமைச்சின் செலவினங்களையும் குறைப்பதற்கான சுற்று நிருபத்தில் கைச்சாத்திட்டுள்ளனர் என்று நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

## இராமாயண...

தினேஷ் குணவர்த்தனவுக்கும் இந்திய முயற்சியாண்மையாளர்ளுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பிலேயே இந்த உறுமொழி அளிக்கப்பட்டுள்ளது.

இராவணாஎலிய, நுவரெலியா, சீதாஎலிய உள்ளிட்ட இராமாயணத்தில் கூறப்பட்ட இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிடவும் பக்தர்களை அழைத்து வரவும் தேவையான முதலீடுகளை செய்ய இந்திய முயற்சியாண்மையாளர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## உயிர்த்த ஞாயிறு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15 வயதில் இருந்து பைபிள் வாசித்தவன் நான். எனது ஆட்சிகாலத்தில், வேறு நபர்கள் இழைத்த தவறால் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றது. அதற்காக பாதிக்கப்பட்ட மக்களிடமும், உயிரிழந்தவர்களின் உறவினர்களிடமும், கத்தோலிக்க மக்களிடமும் மன்னிப்பு கோருகின்றேன்.

நான் தவறிழைக்கவில்லை. நீதிமன்ற தீர்ப்பிலும் இது உறுதியானது. என்னால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்தான் தவறிழைத்தனர். அதற்கு நான் பொறுப்பு கூற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

என்னை முடக்க முடியாது. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் - என்றார். (அ)

## இரா. சம்பந்தன்...

மாக வீட்டிலேயே தங்கியுள்ள அவர் வாராந்தம் மருத்துவர்களின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்.

நேற்று முன்தினம் அவரை பரிசோதித்த மருத்துவர்கள் உடலளவில் அவர் பலவீனமாக இருக்கிறார் என்றும் அவரை மருத்துவமனையில் சேர்க்குமாறும் ஆலோசனை கூறியுள்ளனர்.

இதையடுத்தே இரா. சம்பந்தன் நேற்றைய தினம் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## இணையம்...

மேலும், பெப்ரவரி 1 முதல் பெப்ரவரி 28 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எக்காரணம் கொண்டும் கால அவகாசம் நீடிக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மைத்திரி...

ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்திடம் இருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மன்னிப்பு கோரியதை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளாது என சமூக தொடர்புக்கான தேசிய கத்தோலிக்க பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார். (அ)

## 75ஆவது சுதந்...

சைக்கிள் ஓட்டப் போட்டியாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிறீ மற்றும் முப்படைகளின் உயர் அதிகாரிகள், விளையாட்டுத் துறையினர் எனப் பலரும் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ-02)

# பொலிஸ் மா அதிபராக பெண் ஒருவர் பரிந்துரை?

கொழும்பு, பெப். 01

பொலிஸ் மா அதிபராக மூத்த உயர் பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் மா அதிபராக பெண் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரச உயர்மட்டத்தில் கலந்துரையாடல் நடந்திருப்பது நாட்டின் வரலாற்றில் இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

நாட்டின் சட்டம் மற்றும் நீதித்துறையில் முக்கிய பதவிகளை வகித்த மூத்த பெண் அதிகாரி ஒருவரின் பெயரே இந்தப் பதவிக்காகப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்தன ஓய்வு பெறவுள்ளதா அறிவித்திருந்தார். இதையடுத்து உயர் பொலிஸ் அதிகாரிகளிடையே இந்தப் பதவிக்கு கடும் போட்டி நிலவுகின்றது. இந்நிலையிலேயே, மூத்த பெண் பொலிஸ் அதிகாரியின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சிவில் அதிகாரிகள் பொலிஸ் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், பரிந்துரைக்கப்பட்ட பெண் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் இலங்கை வரலாற்றில் முதல் பெண் பொலிஸ் மா அதிபர் என்ற வரலாற்றைப் படைப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - சி)

# சஜித், அநுரவுக்காகவே உள்ளூராட்சி தேர்தல்!

**ஐக்கிய தேசிய கட்சி**

கொழும்பு, பெப். 01

உள்ளூராட்சிமன்ற தேர்தலை மக்கள் கோரவில்லை. மாறாக சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவின் கோரிக்கைக்கே தற்போது தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த திட்டமும் இவர்களுக்கு இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் சட்டத்தரணி நுவன் சொமிரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் செவ்வாய்க்கிழமை நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் மக்கள் எந்த தேர்தலையும் எதிர்பார்ப்பதில்லை. மாறாக பொருளாதார பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற தெரிவித்து வருகின்றனர். ஏனெனில், கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மக்கள் எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள எந்தளவு கஷ்ட நிலைக்கு முகம்கொடுத்தார்கள் என்பது அவர்களுக்கு தெரியும்.

ஆனால், தற்போது அந்த நிலையை இல்லாமலாக்கி, பொருளாதார பிரச்னைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஓரளவேனும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, பல கோடி ரூபாய் செலவிட வேண்டி ஏற்படுகிறது. கடந்த காலங்களில் இருந்த தேர்தல் செலவை விட இம்முறை தேர்தல் செலவும் அதிகமாகும். வாக்குச்சீட்டு அச்சிடுவதற்காக கடந்த முறை 20 கோடி ரூபா செலவாகி இருந்தது. ஆனால் தற்போது அது 30 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலுக்காக தற்போது செலவிடப்படும் இந்த நிதியை அத்தியாவசிய தேவைகளுக்காக ஒதுக்க முடியும்.

அத்துடன் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி தேர்தலை மக்கள் கோரவில்லை. மாறாக அதிகார பேராசையில் இருக்கும் சஜித் மற்றும் அநுரகுமார அணியினரே தேர்தல் நடத்தப்படவேண்டும் என பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவர்களின் கோரிக்கைக்காகவே தற்போது தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்து வரும் நடவடிக்கை, இன்னும் 6 மாதங்களில் நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

ஏனெனில், கடன் மறுசீரமைப்புக்கு தேவையான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார். இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள ஜனாதிபதிக்கு முடியுமாகி இருக்கிறது. அதனால் பொருளாதார பிரச்னைக்கு ஜனாதிபதி தீர்வுகண்டால், தேர்தலில் பிரசாரம் செய்வதற்கு ஒன்றும் இல்லாமல போகும் என்ற பயம் இவர்களுக்கு இருக்கின்றது. அதனால் தற்போதுள்ள நெருக்கடி நிலையை பயன்படுத்தி, தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தை கைப்பற்றவே இவர்கள் முயற்சிக்கின்றனர் - என்றார். (ஐ)

# இறக்குமதி, ஏற்றுமதி ஒழுங்குவிதி பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு!

கொழும்பு, பெப். 01

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2023.01.01ஆம் திகதிய 2312ஃ77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள், 2023.01.01 ஆம் திகதிய 2312ஃ78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஈழநாடு
Eelanadu

## சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,பெப். 01

சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தின் புனிதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## வசந்த முதலிகே விடுதலை

கொழும்பு, பெப். 01

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றிய அழைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யுமாறு, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ், விடுதலைக்கான உத்தரவை பிறப்பித்தார்.

சந்தேக நபருக்கு எதிராக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றமும் காணப்படவில்லை என விடுதலை செய்யப்பட்டார். (அ)

## பணவீக்கம் ஜனவரியில் 54.2 வீதமாக குறைந்தது!

கொழும்பு, பெப். 01

இலங்கையின் முதன்மை பணவீக்க விகிதம் ஜனவரியில் 54.2 வீதமாக குறைந்துள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

முன்னதாக டிசெம்பரில் முதன்மை பணவீக்கம் 57.2 வீதமாக பதிவாகியிருந்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, டிசெம்பரில் 64.4 வீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் 60.1 வீதமாக குறைந்துள்ளது.

அவ்வாறே, உணவு அல்லாத வகை பணவீக்கம் 51 வீதமாகவும் பிரதிபலித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மோசமான நிதி நெருக்கடியின் காரணமாக இலங்கை ஒரு வருடத்திற்கும் மேலாக அதிகரிவரும் விலைகளுடன் போராடி வருகிறது.

“எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பணவீக்கம் குறைகிறது. மின்சார விலையில் அதிகரிப்பு இல்லை என்றால், அடுத்த மாதம் பணவீக்கம் 51.9 வீதமாகவும் மார்ச் மாதத்திற்குள் 50 வீதத்துக்கும் குறைவாகவும் இருக்கும்” என்று கொழும்பை தளமாகக் கொண்ட முதலீட்டு நிறுவனமான பர்ஸ்ட் கெப்பிட்டலின் ஆய்வாளர் டிமந்த மெத்யூ கூறினார். (அ)

## தொடர்ச்சியான மின் விநியோகத்தை உறுதிசெய்ய மின் சேமிப்பு கட்டமைப்பு

கொழும்பு, பெப். 01

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திடீர் மின்சாரம் தடைப்பட்டால் மற்றும் மின்சாரத்தின் தேவை உச்சத்தில் இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து மின்சார விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் மின்சார சேமிப்பு கட்டமைமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கொரிய குடியரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மானிய உதவிக்கான கட்டமைப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அம்பாந்தோட்டை துணை மின் நிலையத்துக்கு அருகில், 8 மணித்தியாலங்களுக்கான 5 மெகா வோட் கொள்ளளவு கொண்ட மின்சாரம் சேமிக்கப்படும்.

இது தொடர்பான திட்டத்திற்காக கொரிய அரசாங்கம் 11.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திட்டத்தில் கைச்சாத்திடுவதற்கு மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# தமிழ் மக்களுக்கான தீர்வை இழுத்தடிக்கின்றார் ரணில்!

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 01**

**தமிழ் மக்களுக்கான தீர்வு உடனடியாக வழங்கப்படவேண்டும், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடிப்பு செய்பவையாக உள்ளன.”**

**-இவ்வாறு சுதந்திர மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும எம்.பி. தெரிவித்தார்.**

சுதந்திர மக்கள் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சிச் சபை தேர்தலில் நாடளாவிய ரீதியில் போட்டியிடுகின்ற நிலையில் அம்பாறை மாவட்டத்துக்கான சபைகளின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை தெய்யத்தகண்டியில் நேற்று முன்தினம் டலஸ் அழகப்பெரும சந்தித்துப் பேசினார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ச உடன் வந்திருந்தார். அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் முஹமட் முஸ்தபா முஹமட் நிஸாம் அடங்கலாக அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரும் இதில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் டலஸ் அழகப்பெரும எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

எனது மிக நீண்டகால அரசியல் பயணத்தில் நான் எப்போதும் நேர்மையானவனாகவே நடந்து வருகின்றேன். நான் மக்களின் பணத்தை எந்த வகையிலும் சுரண்டியதில்லை. இலஞ்சம், ஊழல், துஷ்பிரயோகம் ஆகியவற்றில் ஈடுபட்டவன் அல்லன்.

நாட்டுக்கும், மக்களுக்கும் மொட்டு நன்மை செய்யும் என்று நம்பி ஆதரித்தோம். அந்த நம்பிக்கை பொய் என்று கண்டபோதே அரசில் இருந்து விலகினோம். சுதந்திரம் கிடைக்கப் பெற்ற காலம் தொட்டு இந்த நாட்டில் தொடர்ச்சியாகக் குடும்ப ஆட்சியே நடந்து வருகின்றது.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களே மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு வருகின்றனர். இதை மாற்ற வேண்டும் என்று நாம் விரும்பினோம். ஊழல் அற்ற ஆட்சியைக் கொண்டு வர எத்தனித்தோம். இதற்காகவே ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போட்டியில் பங்கேற்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னை ஆதரிப்பதாக இருந்தது. ஆனால், இறுதியில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. சம்பந்தன் கடைசி நேரத்தில் மாறி விட்டார்.

நாம் விரும்புகின்ற நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக இளையோர்கள் அடங்கலாக இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் வந்திருக்கின்றோம். தேர்தலில் போட்டியிடுகின்றோம். எமது வேட்பாளர்களை ஆதரியுங்கள்-என்றார். (அ)

# ரணில் ராஜபக்ஷ கம்பனியே நாடு சீரழிவதற்குக் காரணம்!

## திருக்கோவிலில் சஜித் பிரேமதாஸ காட்டம்



அம்பாறை, பெப். 01

“எமது அழகிய நாடு சீரழிவதற்கு ரணில் ராஜபக்ஷ கூட்டுக்கம்பனியே காரணம். ”

-இவ்வாறு திருக்கோவிலில் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ உருவாக்கிய தம்பட்டை ஆடைத் தொழிற்சாலை மீள திறக்கப்படும். இளைஞர்கள் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் வெ.வினோகாந்த் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அனைத்து சபைகளையும் கைப்பற்றி வரலாறு படைக்க இருக்கிறது.

இன்னும் மின்சார கட்டணத்தை அதிகரிக்க எத்தனிக்கும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற மறுத்து இந்த நாட்டை பொருளாதார ரீதியிலே பின்னடைய செய்வதை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை .

எனவே ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்று திரளவேண்டும். ரெலிபோன் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் நாங்கள் இலங்கையை வளமான நாடாக கட்டி எழுப்ப எல்லாம் மூச்சுகளையும் மேற்கொள்வோம்.

எனவே கிழக்கு மாகாணத்தில் காணப்படக்கூடிய தமிழ் பிரதேசங்களான திருக்கோவில், ஆலடிவேம்பு, காரைதீவு, நாவிதன்வெளி போன்ற பகுதிகளில் காணப்படக்கூடிய மக்களின் அன்றாட வாழ்க்கையை உயர்த்துவதற்கு எல்லா விதத்திலும் அத்தனை முயற்சிகளையும் எடுப்பது சஜித் பிரேமதாஸ என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

லஞ்ச, ஊழல், ஜாதி, இன, மதங்களை மையப்படுத்திய அரசியல்வாதிகளை இனிமேல் நாங்கள் கூண்டோடு ஒழித்து விட வேண்டும். இனி ஒருபோதும் அப்படியானவர்களுக்கு நாங்கள் வாய்ப்பு அளிக்கக்கூடாது-என்றார். ஷ

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.